# திகழொளி

2022

முதலாம் வெளியீடு :

திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம்

# TDUSA IN A BRIEF

TRINCOMALEE DISTRICT UNIVERSITY STUDENTS' ASSOCIATION TRINCOMALEE DISTRICT UNIVERSITY STUDENTS' ASSOCIATION

## WHO ARE WE?

Trincomalee District University Students Association also known as TDUSA is a non-profit public organization which was run by enthusiastic University undergraduates of Trincomalee, in order to uplift the educational and social standards of our district. Our association contains members from various streams including arts, commerce, technology, bio and maths.

## WHAT DO WE DO?

TDUSA functions primarily focus on the improvement of the educational standard of Trincomalee students. 25 years of dedicated and sincere service, surpassing many ups and downs lead us now to function in a validated way to deliver invaluable education service to our students. Along with that now we are providing social and environmental improvement services to our district annually on a large scale. Passing over 25 years and more than 700 mentors, our organization has made sustainable development in all activities and earned prominent fame around our society.

# PARTICULARS

## OF OUR ORGANIZATION

TRINCOMALEE DISTRICT UNIVERSITY STUDENTS' ASSOCIATION TRINCOMALEE DISTRICT UNIVERSITY STUDENTS' ASSOCIATION

| | | |
|---|---|---|
| Name | : | Trincomalee District University Students' Association - TDUSA |
| Motto | : | STUDIES DETERMINE FUTURE |
| Founded | : | 1994 |
| Reg.No | : | DG/TG/VSP/11 |
| Address | : | Town hall premises, Dockyard Road, Trincomalee, Sri lanka. |
| Email | : | tdusasl@gmail.com |
| Web address | : | tdusasl.org |
| Phone | : | 074 282 1247 |
| Youtube | : | Learn through TDUSA |

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
# பிரதம குருவின் ஆசிச்செய்தி

நமது அச்சத்தைப் போக்கி மடமைகளை அழிக்கும் ஒரே ஆயுதம் கல்வி மட்டுமே. இன்றைய காலச் சூழ்நிலையில் கல்வியினால் மட்டுமே நாம் உலகைக் காணலாம். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற ஔவையாரின் முதுமொழியும் எவ்வளவு கடினப்பட்டாவது கல்வியைப் பெற்றுவிட வேண்டும் என்ற கருத்தை உணர்த்துகின்றது. நாம் கல்வியைக் கற்றால் மட்டும் போதாது கற்றதன் படி வாழவேண்டும். நாம் பெற்ற கல்வியை அனைவருடன் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும் இதனை திருவள்ளுவர் 'கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக' என்கிறார். எனவே இந்தக் கருத்துக்கு எடுத்துக்காட்டாக திகழும் திருகோணமலை மண்ணிலே பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் 'TDUSA' என்ற ஒன்றியமாக இயங்கி கல்வி கற்கும் அடுத்த தலைமுறையினருக்கு உதவி வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

தாம் எவ்வாறு கல்வியைப் பெற்றார்களோ அதேபோல் தமக்கு பின்பு கற்கின்ற மாணவர்களுக்கு முன்மாதிரிகளாகவும் சிறந்த வழிகாட்டிகளாகவும் திருகோணமலையிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் திகழ்கின்றனர். இது திருகோணமலை மண்ணிலே கல்வி கற்கும் மாணவர்களுக்கு கிடைத்த அரியதோர் வாய்ப்பாகும்.

க.பொ.த உயர்தரம், சாதாரணதரம் என்ற பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதிரிப்பரீட்சைகள், விவாதங்கள் ஏனைய விநாடிவினாப் போட்டிகள் என்பவற்றை நடாத்தி பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கின்ற மேலும் பல செயற்பாடுகளை திட்டமிட்டு ஒழுங்குமுறையாக நடாத்துகின்ற விடயங்கள் மிகவும் சிறப்பானவையாகும். மேலும் திருகோணமலையிலிருந்து வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றாலும் அனைவரும் ஒன்றிணைந்து தமக்கு பின் கல்வி கற்கும் மாணவர்களுக்குச் செய்யும் சேவை அளப்பெரியதாகும். அத்துடன் திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் தொகுத்து வெளியிடப்படும் "திகழொளி" என்ற சஞ்சிகை எதிர்காலச் சந்ததியினருக்கு சிறந்ததோர் ஆவணமாகத் திகழும்.

பல்வேறு துறைகளில் தமது உயர்கல்வியைப் பயிலும் மாணவர்களின் செயற்பாடுகளை வாழ்த்தி அவர்களுக்குரிய ஆசிகளை எல்லாம் வல்ல பத்திரகாளி அம்பாள் வழங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்.

**சோ.ரவிச்சந்திரக் குருக்கள்**
வேதாகமமாமணி சோ.ரவிச்சவிந்திரக்குருக்கள்,
பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்,
திருகோணமலை.

# திருகோணமலை மறைமாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி


**DIOCESE OF TRINCOMALEE**

**Rt. Rev. Dr. Christian Noel Emmanuel**

**Bishop of Trincomalee**

*Bishop's House,*
*Orr's Hill, Trincomalee,*
*Sri Lanka.*
*Tel.: +94 26 222 2677, Fax: +94 26 222 3238*
*Email: bishoptrincomalee@gmail.com*


## ஆசிச் செய்தி

திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முதன் முறையாக "திகழொளி" எனும் மலரை வெளியிடும் இவ்வேளை அதற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பல்கலைக்கழக ஒன்றியம் திருகோணமலையில் கல்வி மற்றும் சமூகம் சார்ந்த பணிகளில் ஈடுபடுவது பாராட்டுதற்குரியதே. விசேடமாக திருகோணமலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு அவர்களை உற்சாகப்படுத்தி வழிநடத்துவது இவ்வொன்றிய அங்கத்தவர்களின் முதன்மையான பணியாகும். க.பொ.த. சாதாரணதர மாணவர்கள், உயர்தர மாணவர்கள், பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியோர் பற்றிய விபரங்களைத் திரட்டி தேவையான வழிகாட்டலை வழங்குவது காலத்தின் தேவை கருதி இவர்கள் செய்யும் மகத்தான பணியாகும்.

இவர்கள் கடந்த 25 வருடங்களாக ஆற்றும் சேவையினை சமூகம் அறிந்திடவும், கடந்த வருடங்களில் சிறப்பாகப் பங்களிப்புச் செய்த உறுப்பினர்களை முன்னிறுத்தி இவர்கள் "திகழொளி" மலரினை வெளியிடுவது பாராட்டுதற்குரியது. இவர்களது இம் முயற்சி சமூகத்திற்கு பல செய்திகளையும் மாணவர்களுக்கு உற்சாகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பணிகள் வளரவேண்டும் மாணவர்களும் சமூகமும் மேலும் பயனடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

+ Ch. Emmanuel

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

"All things to all people"

# கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

கல்வி மற்றும் பொதுப்பணியில் கடந்த 25 வருடங்களாக தம்மை அர்ப்பணித்து செயற்படுகின்ற திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஆண்டு மலராக 'திகழொளி' முதன்முறையாக மலரும் தருணத்தில் இவ்வமைப்புக்கு வாழ்த்துச்செய்தியினை வழங்குவதில் நான் அகமகிழ்வடைகின்றேன்.

2021 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக 1ம் இடத்தையும் க.பொ.த உயர்தர பரீட்சையில் 4ம் இடத்தையும் பெற்று கிழக்கு மாகாணம் தேசிய ரீதியாக சாதனையை நிலைநாட்டி உள்ளது. இச்சாதனையின் பங்காளிகளாக திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், இம்மாணவர் ஒன்றியத்தின் கல்வி தொடர்பான சேவைகளும் வழிகாட்டல்களும் உறுதுணையாக அமைந்துள்ளது என்பதில் துளியேனும் ஐயமில்லை.

'கோணேஸ்வர பூமி' என அழைக்கப்படும் புகழ்மிக்க திருகோணமலை மாவட்டத்தின் வளர்ச்சிக்காக இவ்வமைப்பு கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பவற்றை திட்டமிட்டு செயற்படுத்துவதுடன் எமது பாரம்பரியத்தை நினைவு கூர்ந்து தைப்பொங்கல் போன்ற பல்வேறு கலாசார விழாக்களையும் நடாத்துவதுடன், அறிவு சார்ந்த போட்டிகள், வறிய மாணவர்களுக்கு நிதி வழங்கல் மற்றும் மாணவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

இவ்வமைப்பின் செயற்பாடுகள் சிறப்புற அமைய வேண்டும் என பிரார்த்தித்து கால் நூற்றாண்டு காலமாக இயங்கி வரும் இவ் ஒன்றியத்தின் கல்விசார் மற்றும் சமூகசார் செயற்பாடுகளை மாணவர்கள் மத்தியில் ஏற்றி வருகின்ற 'திகழொளி' மலரிற்கும் திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

**திருமதி. ஞ. புள்ளநாயகம்**
மாகாண கல்விப் பணிப்பாளர்
கிழக்கு மாகாணம்

# வாழ்த்துச்செய்தி

திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஆண்டுமலராக வெளிவரவுள்ள 'திகழொளி' ஆண்டு மலரின் முதலாவது ஆண்டு மலருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு சிரமங்களின் மத்தியிலும், இம் மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான செயற்பாடுகளிலும் சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளிலும் தொடர்ச்சியாக செயற்பட்டு வரும் இவ் ஒன்றியம் மூன்றாவது தசாப்தத்தின் நிறைவை நோக்கி பணியாற்றிக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

ஒன்றியத்தின் கல்விக்கான செயற்பாடுகளில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு பாடத்தெரிவுக்கு வழிகாட்டுதல், கற்றலுக்கான வழிகாட்டல், அவசியமான வேளைகளில் கற்பித்தல் கருத்தரங்குகளை நடாத்துதல், பரீட்சைகளை நடாத்தி, மதிப்பிட்டு மாணவருக்கு வழிகாட்டல், பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிக் கைநூல்களைப் பெற்றுக்கொடுத்தல், விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதற்கும் பொருத்தமான துறைகளைத் தெரிவு செய்வதற்கும் வழிகாட்டுதல், வசதி குறைந்த மாணவர்களுக்கு நிதி உதவித் திட்டங்கள் மூலம் உதவுதல் என பல்வேறு பயனுள்ள செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது. இவற்றிற்கு மேலாக க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கும் ஏனைய கனிஷ்ட தர மாணவர்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் கிராமப் பாடசாலைகளில் வகுப்புகளை நடாத்தி மேம்படுத்தலுக்கு உதவும் பணிகளும் தொடர் செயற்பாடாக செயற்படுத்தப்படுகின்றது.

இயற்கை அனர்த்தங்களின் போதும் போர்க்காலச் சூழலிலும் சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒன்றியம் ஆற்றிய பணிகள் அளப்பெரியது.

இப்பணிகளில் ஈடுபடும் உறுப்பினர்கள், வழிகாட்டும் முன்னாள் உறுப்பினர்கள், ஒத்துழைப்பை வழங்குபவர்கள், நிதியாகவும், பொருளாகவும் ஒன்றியத்திற்கு உதவுபவர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

ஒன்றியத்தின் தகவல்களை வெளிப்படைத்தன்மையுடன் ஆவணப்படுத்தி வெளிக்கொணர உருவாகும் 'திகழொளி' மலரானது வருடாவருடம் மலர்ந்து, ஒன்றியம் அனைவரது ஆதரவையும் பெற்று மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் பரந்த சேவையைத் தொடர்ந்து வழங்குவதற்கு வழிகாட்டும் ஒளியாகத் திகழ இறை அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**மா.இராசரெத்தினம்**
போசகர்,
திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

# வாழ்த்துச்செய்தி

ஒரு பண்பட்ட சமூகத்தின் வளர்ச்சியில் கலங்கரை விளக்காகவும் முதுகெலும்பாகவும் திகழ்கின்றவர்கள் தான் பல்கலைக்கழக மாணவர்கள் ஆவார்கள். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை போன்ற முதுமொழிகளை உண்மையாக்கியவர்கள் தான் இந்த திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகும்.

இந்த ஒன்றியமானது முதற்கட்டமாக பல்கலைக்கழக மாணவர்களின் ஆளுமைத்திறனை வளர்ப்பதுடன் அவர்களின் பல்துறை சார்ந்த செயற்பாடுகளை மாவட்ட கல்வி அபிவிருத்தியில் ஒருங்கிணைத்து செயற்படுவதற்கு ஒரு களத்தையும் அமைத்துக் கொடுக்கிறது. ஒரு வளமான ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை வடிவமைக்கும் பாரிய பங்கு அறிவால் உயர்ந்த தற்கால பல்கலைக்கழக மாணவர்களின் கைகளில் தான் இருக்கிறது.

ஆகவே காலத்திற்கு ஏற்ற வகையில் உயரிய சிந்தனையில் தூரநோக்கு செயற்றிட்டங்களை வகுத்து உயர்தர வகுப்பு அடைவு மட்டங்களை அதிகரித்து சகல மாணவர்களும் மூன்று பாடங்களிலும் சித்தியெய்துவதற்கு ஆவணம் செய்ய வேண்டும் என்பது இந்த ஒன்றியத்தை ஸ்தாபிப்பு செய்த சகல மூத்த உறுப்பினர்களின் அவாவாகும். அதை நோக்கி உங்கள் எதிர்கால பயணம் அமைய வாழ்த்துக்கள்.

**வைத்திய கலாநிதி.ந.சரவணபவன்**
Chairperson - Monitoring Committe
1990 உயர்தர கற்கை பிரிவு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
கிளிநொச்சி மாவட்டம்.

## நிர்வாக குழு சார்பாக

திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினது கால் நூற்றாண்டு கடந்த கல்விசார் செயற்பாடுகளும், சமூகசார் செயற்பாடுகளும் அளப்பெரியது. ஆயினும் திருகோணமலை மாவட்ட நலன் விரும்பிகள், சமூக செயற்பாட்டாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என ஒன்றியத்தின் வரலாறு, வளர்ச்சி, வருடம் கடந்த செயற்பாடுகள் பற்றி அறிந்தவர்கள் சொற்பமே.

எமது வருடாந்த ஒன்றிய செயற்பாடுகள், ஒன்றியத்திற்காய் அயராது உழைத்த உறுப்பினர்கள், ஏனையவர்கள் என்பவை குறித்து அறிந்து கொள்ளக் கூடிய நிலையான ஆவணத்தின் தேவையை இந்த வெற்றிடம் உணர்த்தியுள்ளது.

ஆகவே, இந்த வெற்றிடத்திற்கான தீர்வாய், ஒன்றிய முன்னாள், இந்நாள் உறுப்பினர்களின் ஆக்கங்கள், வரலாறு, தற்கால செயற்பாடுகள், புகைப்படங்கள் என்பவற்றைச் சுமந்தவாறான 'திகழொளி" ஆண்டு மலரானது இவ்வருடம் முதல் முறையாக மலரவுள்ளதை எண்ணி தலைவர் என்ற வகையில் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

முதல் முறையாக இந்த ஆண்டு மலர் வெளியீட்டுக்கு காத்திரமாக அமைந்த அனைத்து ஒன்றிய உறுப்பினர்களும் பாராட்டுக்குரியவர்கள். மேலும் ஒவ்வொரு வருடமும் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வின் போது வெளியிடத் திட்டமிடப்பட்டிருக்கும் இம்மலரானது ஆண்டு தோறும் செவ்வனே மலரும் என எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் கொள்கின்றேன்.

நன்றி.

**ரவிதாஸ் ஹிமோஷ்**
தலைவர்,
நிர்வாகக் குழு, 2022

## மலர்க்குழு சார்பாக

நிகழ்காலத்தை விளங்கிக்கொள்ள முதலில் கடந்த காலத்தை விளங்கிக்கொள்ள வேண்டும் என்கிறார் கார்ள் சேகன். வரலாறு என்பது எந்தவொரு சமூகத்திற்கோ அமைப்பிற்கோ அடிப்படையாகும். எங்கள் வரலாற்றை நாங்களே அறிந்திராமல் இருப்பது எமது பெயரை அறியாமல் இருப்பது போலாகும். இதனால் தான் எந்தவொரு விடயத்திற்கும் முறையான ஆவணப்படுத்தல் என்பது இன்றியமையாததாகும்.

கால் நூற்றாண்டு கடந்து திருகோணமலையில் கல்விக்கான ஒரு அமைப்பான திருகோணமலை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகளுக்கான ஒரு முறையான ஆவணப்படுத்தல் இல்லை எனும் குறையை நிவர்த்தி செய்யும் முகமாக எடுக்கப்பட்ட முதல் முயற்சி தான் இந்த 'திகழொளி".

இத்தோடு ஒன்றிய உறுப்பினர்களின் எழுத்தாளுமையையும் நவீன சிந்தனை போக்கையும் பிரதிபலிக்கும் விதமாக அவர்களின் ஆக்கங்களும் உள்ளடக்கப் பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். இன்று நாங்கள் ஏற்றிய இந்த சுடர் நாளை ஒரு பெரு ஒளியாக திகழ வேண்டும் என பிரார்த்தித்து என் உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

**முரளிதரன் செந்தூரன்**
மலர்குழு தலைவர்.

## மலர்க்குழு

**ஆலோசனை :**

ரவிதாஸ் ஹிமோஷ்

திருச்செல்வம் அர்ஜிதன்

முகுந்தன் அக்ஷயன்

ஜெகமோகன் அம்ரித்சாகர்

சேலக்ஷிகா சௌந்தராஜன்

சுஜானி வாமதேவன்

ரிந்தியா கலைச்செழியன்

**இதழாசிரியர் :**

முரளிதரன் செந்தூரன்

**மலர்க்குழு :**

அன்சி டொனேசியா கிளெனி ஜோன்பிள்ளை

ரம்மியலாஷினி சதீஸ்குமார்

சரிஷ்குமார் பிரதிக்ஷன்

சஞ்சனி உமாச்சந்திரன்

இராஜயோகம் சஞ்சயன்

ஆதித்தியா கேதீஸ்வரன்

**ஆண்டு** : 2022

**அச்சுப்பதிப்பு** : Ben vision Printers

# EXECUTIVE COMMITTEE 2022

## PRESIDENT



RAVITHAS HIMOSH
FACULTY OF ENGINEERING
UNIVERSITY OF RUHUNA

## SECERATARY



GANGATHARAN NALINKUMAR
FACULTY OF MEDICINE
EASTERN UNIVERSITY OF SRILANKA

## TREASURER



KAVIMAHINDAN RATHUSHAN
FACULTY OF BUSINESS
UNIVERSITY OF MORATUWA

## VICE PRESIDENT



SUTHAKARAN KIRUSHANTHINI
FACULTY OF ARTS
UNIVERSITY OF PERADENIYA

## JOINT SECRETARY



SUTHAN SHARAN
FACULTY OF TECHNOLOGY
UNIVERSITY OF RUHUNA

## MEMBERS



THAYALANESAN TITUS
FACULTY OF ENGINEERING
UNIVERSITY OF JAFFNA



NITHIYA NANTHEESWARAN
FACULTY OF BUSINESS STUDIES
UNIVERSITY OF JAFFNA



SANJSANA MATHIYALAGAN
FACULTY OF MANAGEMENT
UNIVERSITY OF SRI JAYEWARDENEPURA



THIRUCHELVAM ARJITHAN
FACULTY OF MEDICINE
UNIVERSITY OF KELANIYA

## EDITORS



SELUXSIKA SOUNDARARAJAN
FACULTY OF MEDICINE
UNIVERSITY OF JAFFNA



JEGANMOHAN AMRITHSAGAR
FACULTY OF ENGINEERING
UNIVERSITY OF MORATUWA

# PATRONS

**MR.M.RAJARETNAM**

**DR.R.RATNARANJITH**

# MONITORING COMMITTEE

**DR.A.SARAVANABAVAN**
CHAIRPERSON

**MR.SIVAROOBAN**

**MR.C.THUVARAGAN**

**DR.G.VASANTHARAJA**

**MR.NESATHARSHAN**

**MR.ARANIYAN SIVANESARAJAH**

**MRS.SARANYA SUTHARSAN**

**MR.BHARATHINATHAN**

**MR.SRITHARAN**

**MR.PRATHEEPAN**
AUDITOR

# உள்ளே...


- **ஒன்றியத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்**
  – ரவிதாஸ் ஹிமோஷ் | முரளிதரன் செந்தூரன்
- **துலக்கம் தந்த கலங்கரை விளக்கம்**
  – கோகுலச்செல்வன் விபுலன்
- **"What if I am in Slytherin"**
  – திருக்குமரநாதன் கோபிபிரகாஷ்
- **மாறும் உலகம்**
  – சரிஷ்குமார் பிரதிக்ஷன்
- **Depression - மனஉளைச்சல்**
  – சுஜன் சுகுமாரன்
- **ஓடவும் முடியாது ஒழியவும் முடியாது**
  – முரளிதரன் செந்தூரன்
- **எறிவதெல்லாம் தெறித்திடும் மீண்டும்**
  – சஞ்ஜனி உமாசந்திரன்
- **'பொன்னியின் செல்வன்' திரைப்பட வருகையும் நிஜ நாவலில் அதன் தாக்கமும்**
  – கிருட்ணபிள்ளை அக்ஷனன்
- **அரச பல்கலைக்கழகமும் பகிடிவதைகளும்**
  – ஆதித்யா கேதீஸ்வரன்
- 2021 Batch of TDUSA
- 2022 Batch of TDUSA
- WINNERS OF "THE GAMBIT" CHESS TOURNAMENT - 2022
- WINNERS OF "DO YOU KNOW?" QUIZ- 2022

# ஒன்றியத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்

■ ரவிதாஸ் ஹிமோஷ் | முரளிதரன் செந்தூரன்

28 வருடங்களாக அழியாப் புகழுடன் என்றும் அழியாச் செல்வமாம் கல்வியை முன்னிறுத்தி தான் உயர்ந்த மண்ணின் நலன்தனை உடன் நிறுத்தி, கல்விசார் செயற்பாடுகள், சமூக நலன்சார் செயற்றிட்டங்கள் என திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது கைக்கொண்டு சிறப்புடன் நடத்திக் கொண்டிருக்கும் இந்த மூன்றாம் தசாப்தம் நோக்கிய பயணம் ஏறத்தாழ தொண்ணூறுகளில் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

தொண்ணூறுகளின் காலகட்டம் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களிற்கு தெரிவாகும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்பட்ட இருண்ட பக்கங்கள். அவ்வாறு தெரிவான மாணவர்களிலும் பெருவாரியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களாகவே காணப்பட்டனர். யுத்த சூழ்நிலைகள் காரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று வீடு திரும்ப இயலாமல் இடருற்றிருந்த காலம் அது. மாணவர்கள் சிறிய கப்பல்கள் மூலமே யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வரை செல்லவேண்டிய கட்டாயமிருந்த வேளை கப்பல் போக்குவரத்திலும் கூட பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாத அசாதாரண நிலைமைகள் காணப்பட்டது. இதற்கு மேலாக மாணவர்களினது தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நிலைமைகள் கூடியிருந்தது. காலப்போக்கில் இந்த கல்விசார் தேவைகள் முன்னிலைப்படுத்தப்பட திருகோணமலை மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களிற்குத் தெரிவான சமூகப் பொறுப்பு வாய்ந்த இளைஞர்கள் சிலரின் தூர நோக்குற்ற சிந்தனையினால் நம்மிடையே இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல், மாணவர்களின் கல்வி மேம்பாடு, கப்பல் போக்குவரத்துகளில் பல்கலைக்கழக மாணவர்களிற்கு முன்னுரிமை வழங்கல், அவர்களது தேவைகளை முகாமைத்துவப்படுத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு இந்த ஒன்றியத்திற்கான விதை போடப்பட்டது. நோக்கம் தளராமல் தளைக்க 14.09.1995ம் ஆண்டு ஒன்றியம் உத்தியோக பூர்வமாக பதிவுசெய்யப்பட்டு திருகோணமலையிலிருந்து அரச பல்கலைக்கழகங்களிற்கு தெரிவான கணித,

விஞ்ஞான, கலை, வர்த்தக பிரிவு மாணவர்களைக் கொண்டு வளர்ந்து விரிந்து ஓங்கி நிற்கிறது திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

ஒன்றியத்தின் முதலாவது செயற்பாடாக திருகோணமலையில் உள்ள பட்டதாரிகளிடம் நிதி சேகரித்து யுத்தத்தினால் பாதிப்புற்ற வன்னிப் பிரதேச சிறார்களிற்கு பால்மா மற்றும் Hurricane lamp வழங்கி வைத்தலானது அமைத்து. இந்த சமூக நலன் கருதிய செயற்பாட்டிற்கு அன்றைய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் பாராட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அன்று தொடங்கிய ஒன்றியத்தின் சமூக நலன்சார் செயற்றிட்டங்கள் 2004 சுனாமியின் போதான நிவாரணப் பொருட்கள் வழங்கி வைத்தமை, மருத்துவ முகாம்களை ஒழுங்கமைத்து நடாத்தியமை, வெருகல் பிரதேச வெள்ள இடர்முகாமைத்துவ செயற்றிட்டம், வெள்ள நிவாரணங்கள் என இறுதியாக கொரோனா பெருந்தொற்று வேளையிலும் ஒன்றிய மாணவர்களின் முயற்சியினால் நிவாரணப் பணியினை சிறப்புடன் முன்னெடுத்து வெற்றி கண்டனர்.

அன்றைய காலகட்டத்தில் முக்கியமானதும் கட்டாயமானதுமான தேவையாக அமைந்த பல்கலைக்கழக அனுமதியை அதிகரித்தல் எனும் நோக்கினைக் கொண்டு முதல்முறையாக 1995ம் ஆண்டு க.பொ.த உயர்தர மாணவர்களிற்கான இறுதி முன்னோடிப் பரீட்சை ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிதி நெருக்கடி, யுத்த சூழ்நிலைகள் போன்ற நெருக்கடிகளைத் தாண்டி காகிதாதிகள், அச்சு இயந்திரம், அச்சுமை என்பவற்றை நன்கொடையாகப் பெற்று ஒன்றிய மாணவர்கள் திருகோணமலை நகரப் பகுதி தவிர துவிச்சக்கரவண்டி, கப்பல் என்பவற்றில் சென்று மூதூர், கிண்ணியா போன்ற பிரதேசங்களிலும் முன்னோடிப் பரீட்சைகளை சிறப்பாக நடத்தி முடித்து மாவட்ட நிலைத் தரப்படுத்தல்களையும் வெளியிட்டமை சிறப்பம்சமாகும். இந்த முன்னோடிப் பரீட்சைப் பெறுபேறுகள், தரவரிசைகள் என்பவை இறுதிப் பொதுப் பரீட்சை பெறுபேறுகளை பெரிதும் ஒத்துப் போக இம்முயற்சியிற்கு மக்கள் ஆதரவு பெருகியது. அன்றைய இம்முயற்சியின் அடித்தளமே இன்று வரை TDUSA Annual Pilot Examination என்று சிறப்புற நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இரண்டாயிரம் காலப்பகுதியில் பரீட்சைப் பெறுபேறுகளை 2004ம் ஆண்டு வலைத்தளம் ஆரம்பிக்கப்பட்டு வலைத்தளத்தில் வெளியிட எடுத்த முயற்சி கைவிடப்பட்ட போதிலும் 2019ம் ஆண்டு www.tdusasl.org எனும் உத்தியோகபூர்வ வலைத்தளம் ஆரம்பிக்கப்பட்டு 2020ம் ஆண்டு தொடக்கம் முன்னோடிப் பரீட்சைப் பெறுபேறுகள் ஒன்றிய வலைத்தளத்தில் வெளிவரத் தொடங்கியது. இப்பணிக்கு அன்றும் இன்றும் எமது மாவட்ட உயர்தர ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது ஆகும். 2022ம் ஆண்டில் இவ்வலைத்தளம் இற்றைப்படுத்தப்பட்டு கவர்ச்சிமிக்க வலைத்தளமாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒன்றியத்தின் தொடர் செயற்பாடும், வளர்ச்சியும் ஒன்றிய அலுவல்களிற்கான அலுவலகம் ஒன்றின் தேவையை உணர்ந்து 1995ம் ஆண்டு திருகோணமலை நகரசபையினால் ஒன்றியத்தின் சேவையை ஊக்குவிக்கும் முகமாக நகர கடற்கரைக்கு முன்பாக தற்போது திருக்கோணேஸ்வர ஆலய அலுவலகம் இயங்கிவரும் கட்டடம் தற்காலிகமாக வழங்கிவைக்கப்பட்டது. அதன் பின்னரான அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அந்தக் கட்டடம் கைவிடப்பட்டு 2017 மற்றும் 2018 காலப்பகுதியில் இன்றைய ஒன்றிய அலுவலகத்திற்கு பின்புறமாகவுள்ள கட்டடம் வழங்கப்பட்டு மீண்டும் 2019ம் ஆண்டளவில் இன்றைய அலுவலகம் மறுசீரமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

ஒன்றியத்தின் அடுத்த கட்டமாக எமது மாவட்ட பல்கலைக்கழக மாணவர்களில் ஆண்டுவருமானம் குறைந்த மாணவர்களின் படிப்புச் செலவிற்கு தோள்கொடுக்கும் முகமாக ஒன்றியத்தினால் ஒரு நிதியம் அமைக்கப்பட்டு மாணவர்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்தது மட்டுமில்லாமல் 1997ம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக திருகோணமலை மாணவர் ஒன்றியம்(JUTSU) என்ற கிளையும் உருவாக்கப்பட்டு ஒன்றியம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டது. காலப்போக்கில் இது மறைவடைந்து இன்று 2019ம் ஆண்டு ஜனவரி 'விழுதுகள்' என வருமானம் குறைந்த மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்வதற்காக ஓர் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு 2021ஆம் ஆண்டு தனி யாப்பு, வங்கிக் கணக்கு என ஒன்றியத்தின் கீழ் செயற்படும் ஓர் அமைப்பாக ஆரம்பிக்கப்பட்டு நங்கூரமிடப்பட்டது. இன்று விழுதுகள் மூலம் பயன்பெறும் மாணவர்கள் ஏராளம்.

2000ம் ஆண்டு திருகோணமலையைச் சேர்ந்த கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்விகற்றுக் கொண்டிருந்த மாணவனாகிய க.உமாசங்கர் என்பவரிற்கு சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு நிதி சேர்ப்பதற்காக ஒன்றியத்தால் 'எரிமலை' எனும் தலைப்பில் ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகம் நிதி சேகரிப்புக்காக மட்டுமில்லாது மாணவர்களின் நாடகத்திறமையை வெளிக்கொண்டுவரவும், சமூகம் மத்தியில் போதைப்பொருள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்திருந்தது. இந்நாடகத்தின் மூலம் ஐந்து இலட்சம் ரூபாவிற்கு மேல் பணம் சேர்க்கப்பட்டது மட்டுமில்லாமல் அன்றைய சமூகத்தில் ஒரு பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாரிய முயற்சியால் பயனடைந்த உமாசங்கர் என்பவர் பின்னர் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக செயற்பட்டார்.

இதைவிட மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக க.பொ.த சாதாரண தர மாணவர்களிற்கு கருத்தரங்குகள், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் நிர்வாக சேவை போன்றவற்றிற்கான பரீட்சைகள் தொடர்பான உதவிகள், கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. அன்றைய கால்தடத்தின் தொடர்ச்சியாய் இன்றும் உயர்தர மாணவர்களிற்கான முதற்படிவம் நிரப்புதல் தொடர்பான ஆலோசனை வழிகாட்டற்கருத்தரங்கு (First form guidance seminar), நகரை அண்டிய பிரதேச பாடசாலை மாணவர்களிற்கான வகுப்புக்கள், அலகுப்பரீட்சைகள், சாதாரணதர மாணவர்களிற்கான இறுதிப்பரீட்சை வழிகாட்டற்கருத்தரங்கு (O/L Seminar) என்பன 'விழித்திரு' செயற்றிட்டம் மூலம் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக உயர்தர மாணவர்களின் அறிவுப்பசியிற்கு தீனியிடும் முகமாக 1996ம் ஆண்டு "Do you know"எனும் வினாடிவினாப் போட்டியானது பாடசாலை மாணவர் அணிகளிற்கு இடையே அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நல்வரவேற்பை பெற்றது. ஆரம்பத்தில் கணித, விஞ்ஞானப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, கலைப்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளிற்கான போட்டியாய் நடாத்தப்பட்ட போதிலும் காலப்போக்கில் சில தவிர்க்கப்படாத காரணங்களினால் இரு பிரிவுகளிற்குரிய போட்டியாய் மட்டுப்படுத்தப்பட்டது. எனினும் ஒன்றிய மாணவர்களின் முயற்சியால் 2021ம் ஆண்டு கணிதவிஞ்ஞானம், வர்த்தகம், கலை, தொழினுட்பம் என சகல பிரிவுகளிற்குமான போட்டியாய் இது விரிவாக்கம் அடைந்ததுடன் 2021ம் ஆண்டு "சுழல்கிண்ணம்" அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட கல்விசார் செயற்றிட்டங்களை சிறப்புற நடாத்துவதற்குரிய நிதி சேகரிப்பிற்காக முதன்முதலில் Annual car wash programme 2003ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கு

மேலதிகமாக பொது வைத்தியசாலை இரத்த வங்கியின் வேண்டுகோளிற்கு இணங்க ஒழுங்கமைக்கப்படும் இரத்ததான முகாம்கள், மகாசிவராத்திரி அன்று திருக்கோணேஸ்வர ஆலய தண்ணீர் பந்தல், பசுமைகாண் என ஒன்றியத்தின் வருடாந்த செயற்பாடுகள் அளப்பெரியது. இதனைத் தாண்டி சிறுமழலைகளின் குறுநகையில் திழைக்க சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தும் “குறுநகை உலா” நிகழ்வு 2019ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. திருகோணமலையில் சதுரங்க சுற்றுப்போட்டிகள் ஏதேனும் நடைபெறாத தேவையை முற்றாக்க 2022ம் ஆண்டு 450+ போட்டியாளர்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட “THE GAMBIT” Chess Tournament என செயற்றிட்டங்களின் வரிசை ஆண்டுகள் கடக்க மாணவர்களின் அயராத உழைப்பால் அடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொண்ணூறுகளில் மாவட்டத்தின் கல்வி மற்றும் சமூகம்சார் தேவைகருதி எதிர்கால விருட்சத்தை கனவாய் கொண்டு எம் இளைஞர்களால் இடப்பட்ட விதை இன்று 28 வருடம் கடந்து கம்பீரமாய் பரந்து விரிந்து இருக்கின்றது என்றால் அதற்கு ஒன்றியத்திற்காய் தன்னலம் பாராது வியர்வை சிந்திய ஒன்றியத்தின் முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், நன்கொடையாளிகள் என அனைவரினதும் ஒத்துழைப்பினால் மட்டுமே சாத்தியமானது என்றால் அது மிகையாகாது. கால் நூற்றாண்டு கடந்த இந்த தீராப்பயணம் என்றும் மிளிரும் தீரா ஒளியாய் திருகோணமலை மாவட்டப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாய்.

## துலக்கம் தந்த கலங்கரை விளக்கம்

■ கோகுலச்செல்வன் விபுலன்
பொறியியல் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

சிதறிய முத்துக்களை சேர்த்தெடுத்து
அணிகலனாய் கோர்த்தெடுத்து
அமைத்தெடுத்த ஓரமைப்பு

பிரிந்திற்ற தங்க துகள்களை சேர்த்து
ஓர் அச்சிலே வார்த்து
வடிவமைத்த வலையமைப்பு

வார்த்தைகளின் கோர்வையால் வடிவமைந்த காவியம்
வர்ணங்களின் சேர்க்கையால் வரைந்தெடுத்த ஓவியம்
திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

திருமலை மண்ணைத் தாண்டி
பரவிற்ற இவன் புகழ் - கல்வி
பெருமழை வாரி மண்ணை
வளமாக்கும் ஓர் முகில்

பல தடைகள் வந்தும் தழும்பாத
நிறைகுடம்
வருங்கால விருட்சங்களின் இளங்கால
உறைவிடம்

கற்றோனை வைத்து மற்றோனை
வழிகாட்டும் ஓரிடம் - ஊரெல்லாம்
உற்றோனாய், அல்லல்
அற்றோனாய்
ஆக்கிற்றிருக்கும் பேரிடம்

மழலை மனங்களில் மறவாத
குறுநகை உலா நிகழ்வுகள்
கல்விக்காய் ஏங்கும் வறுமை
சிறுவர்க்கு உதவிடும் சிறகுகள்

கற்றோனால் கருவுற்ற இந்த கழகம்
கொற்றம் அடைந்தாலும்,
கொள்கை பாதை முடியாது
கொண்ட பற்றும் மாறாது

நம் மண்ணில் தேவதைகள் உள்ள வரை
முடியாது இவன் சேவைகள்
மாறாது மண் மேல் கொண்ட பார்வைகள்

# “What if I am in Slytherin”

■ **திருக்குமரநாதன் கோபிபிரகாஷ்**
**பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்**

எம்மில் பல மாணவர்களுக்கு எவ்வளவு முயன்றும் தாம் எதிர்பார்த்த கற்கை நெறிகள் கிடைக்காமல் போயிருக்கலாம். அதிலும் அண்மைக் காலத்தில் பல்கலைக்கழக விண்ணப்பங்கள் புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என இரு அளவீடுகள் கொண்டு மதிக்கப்பட்டமையால் அரங்கேறிய பல எதிர்பாராத திருப்பங்களும் பல எதிர்பார்த்த ஏமாற்றங்களும் தான் இப்படியாக நிகழக்கூடாதென நாம் நினைப்பவை யாவற்றையும் காலம் வலுக்கட்டாயமாக நிகழ்த்திக் கொண்டே இருக்கும் என்பதற்கு சான்றும் கூட. ஆனால் கவியரசர் கண்ணதாசன் கூறியதைப் போல் “எங்கே வாழ்க்கை தொடங்கும் அது எங்கே எவ்விதம் முடியும் இது தான் பாதை இது தான் பயணம் என்பது யாருக்கும் தெரியாது”

Harry Potter படத்தின் க்ளைமேக்ஸ் காட்சியில் ஹாரியின் மகனான Albus Sevarus Potter கேட்பது போன்று “What if I am in Slytherin?” என்ற கவலை தோய்ந்த சந்தேகம் தான் வெட்டுப்புள்ளிகள் வெளிவந்தவுடன் மேலே விவரித்த பல மாணவர்களின் எண்ணவோட்டம் கூட. எவ்வாறு சிறுவயதில் இருந்தே ஹறி பாட்டரின் மனதில் தாய், தந்தை, உறவினர் மூலமாக Gryffindor இல்லத்தின் மீதான ஒரு பிம்பம் கட்டமைக்கப்பட்டு விடுமோ அதைப் போன்று எமது சமூகத்தால் இளம்வயது தொட்டு பல்கலைக்கழகங்கள் மீதும் கற்கைநெறிகள் மீதும் மாயவிம்பம் கட்டமைக்கப்பட்டு விடுகின்றது. எனவே இம்மாயவலையில் சிக்குண்ட நாமும் குறித்த பிம்பங்கள் மீதான அளவுகடந்த எதிர்பார்ப்பால் அவை கைகூடாத வேளை இவ்வாறு வாடிப்போவதும் வழமைதான்.

ஆனால் இப்போது தான் நம் ஹாரி தன் மகனுக்கு கூறிய அந்த வார்த்தைகளை மீட்டிப் பார்க்க வேண்டும். “Albus Sevarus, You were named for two headmasters of Hogwarts. One of them was Slytherin and he was probably the bravest man I ever knew…..” Albus Dumbledore இற்கு சமமாக இல்லை. சொல்லப்போனால் துணிச்சலில் அவரை விட உயர்த்தியே

Sevarus Snape ஐப் பற்றி மகனிடம் கூறியிருப்பார். அதாவது அனைத்து இல்லங்களுமே தலைசிறந்த ஜாம்பவான்களை உருவாக்கிய வண்ணம் தான் உள்ளன. ஆனால் சமூகத்தினால் கட்டியெழுப்பப்பட்ட மாயத்திரைகள் எம் புலன்களை மறைப்பதால் ஆரம்பம் முதலே Dumbledore ஐ கண்டு வியந்த நம் Snape போன்ற மாமனிதரை கொண்டாட Harry Potter போன்று எமக்கும் தாமதமாகின்றது.

இவ்வாறு நாம் கொண்டாட தாமதமாகியமையால் கற்கைநெறிகள் தம் வல்லமையை இழப்பதும் கிடையாது. ஆயிரம் கைகள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை போல தான், ஆயிரம் தான் நம்மைப் போட்டு வைத்தாலும் பல்கலைக்கழக வாழ்க்கை கசப்பதில்லை. வீட்டினை மறந்து விடுதி வாழ்வை ரசித்து விடைபெறும் தருணத்திலும் வலிக்காமல் இனிப்பது தான் பல்கலைக்கழக வாழ்வின் சிறப்பு. Hogwarts என்னும் பல்கலைக்கழக வாழ்க்கையை ரசிப்பதற்கு நாம் $9\,{}^{3}/_{4}$ இல் செல்கின்ற ரயிலில் பயணித்தால் போதுமே தவிர அங்கு நம் இல்லம் Ravenclaw ஆ Hufflepuff ஆ Slytherin ஆ Gryffindor ஆ என்பதிலும் சரி, எத்தனையாவது ரயிலில் பயணிக்கின்றோம் என்பதிலும் சரி எதுவுமே தங்கியிருப்பதில்லை.

பலருக்கு $9\,{}^{3}/_{4}$ இல் சரியான நேரத்தில் ரயிலை எட்டிப்பிடித்து Hogwarts இற்குப் பயணிப்பதே எட்டாக்கனியாக இருக்கும் வேளை, கஷ்டப்பட்டு எட்டிப்பிடித்த ரயிலில் மகிழ்ச்சியாக பயணம் மேற்கொள்வதை விடுத்து வீணாக சமூகத்தினால் கட்டியெழுப்பப்பட்ட போலியான பிம்பங்களை எண்ணி கவலைப்படுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. ரயில் பயணத்தின் போது பல்வேறு நேர்மறை எண்ணங்கள் எழுவது இயல்பு தான். ஆனால் அவை அனைத்தும் Hogwarts என்னும் பல்கலைக்கழக வாழ்க்கையில் தரையிறங்கியவுடன் மகிழ்ச்சி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிடும் என்பதும் கண்கூடு. அதே சமயம் வாழ்கையில் முன்னோக்கி பயணிக்க Platform இல் குறைந்த கட்டணத்தில் டிக்கெட் கிடைக்குமே தவிர அந்த Platform இல் மட்டும் தான் டிக்கெட் கிடைக்குமென்றும் இல்லை.

இந்த ரயில் பயணத்தில் சேருமிடம் வரும்வரை சந்திக்கும் நபர்கள், நிகழ்வு எல்லாம் தவிர்க்க முடியாத ஒன்று. நடந்தே தீரும். அப்படித்தான் நம் வாழ்க்கையும் கூட. எனவே விதி வரைந்த பாதையில் விடை தெரியாத விண்மீன்களாக விரைந்து செல்லும் பாதை எதுவாக இருப்பினும் பயணம் முன்னோக்கியதாக இருந்தால் போதுமானது.

# மாறும் உலகம்

■ சரிஷ்குமார் பிரதிக்ஷன்
பொறியியல் பீடம், உருகுணைப் பல்கலைக்கழகம்

என் துயில் முறிக்கும் சேவல், குருவியை
காணவில்லை
விடுமுறையில் சென்றனவோ
தெரியவில்லை

கோயில் மணி ஒலிப்பதை
நிறுத்தி விட்டதே
வாகனங்களும் இயந்திரங்களும்
கோபம் கொண்டதாலோ

மாசுக்களும் தூசுக்களும் நமக்கு
மிகவும் நல்லது போலும்
பிராண வாயுவை விடவும் அதை வெளியில்
அதிகம் கலக்கிறோம்

யுத்தங்கள் பல நடக்கும்
தினம் தினம்
மரண ஓலத்தில்
காண்கிறோம் ஒரு சுகம்

வாசிப்பில் இல்லை ஈடுபாடு
இனி ஏன் பத்திரிகை, புத்தகம்
தூக்கிப்போடு

பேசுவதற்காக கண்டுபிடித்தோம்
தொலைபேசி
பேசுவதையே நிறுத்திவிட்டோம்
கொஞ்சம் யோசி

நவீன உலகுக்கு ஏன் தேவை
மரங்கள்
அவற்றை வெட்டி வீழ்த்துகின்றன
நம் கரங்கள்

விண்கலங்கள் கொண்டு தாண்டிடுவோம்
நம் எல்லைக்கோட்டை
அதுபோல் உருவாக்கினோம் ஓசோனில்
பெரிய ஓட்டை

உலகெங்கும் அடைகின்றது
மேம்பாடு
கலியுகத்திற்கு ஏன் தேவை
பண்பாடு

அழகின் உருவாய் இறைவன்
படைத்து
அழிவின் விளிம்பில் நிற்கிறது இம்
மாறும் உலகம்

# Depression - மனஉளைச்சல்

■ சுஜன் சுகுமாரன்
மருத்துவப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

விஞ்ஞானம் இவ்வளவு வளர்ந்தும் இன்னும் முழுதாக அறியப்படாத மர்மம் எங்கள் மனம். மகிழ்ச்சி, கவலை இவ்விரண்டும் எங்கள் வாழ்வின் அங்கம். மூளையினுடைய ஒரு விதமான இரசாயன மாற்றத்தின் வெளிப்பாடு. ஆனால் இவைகள் இரண்டுமே சாதாரண உணர்வாக வெளியே தோன்றிய போதிலும், உண்மையாக பல சிக்கலான இரசாயனத் தாக்கங்களினதும், மில்லியன் கணக்கான நரம்பு கணத்தாக்கங்களினதும் விளைவே ஆகும்.

எனவே மகிழ்ச்சி, கவலை ஆகிய இரண்டிற்கும் ஒரு வரையறைகள் உண்டு. அந்த வரையறையை அவைகள் தாண்டிச் செல்லும் போது அவைகள் மூளையினுடைய ஒரு குறைபாடாகவே மருத்துவ ரீதியாக கருதப்படுகிறது.

இப்போது விடயத்திற்கு வருவோம். எங்களுடைய நண்பர்கள் பலர் இன்று நகைச்சுவையாக உரைக்கும் வார்த்தை "மச்சா நா செம்ம டிப்றெசன்ல இருக்கண்டா. நாளைக்கு பேசுவமாடா". பரீட்சையில் புள்ளிகள் குறைந்தாலோ, காதலி போட்ட மெசேச்கு றிப்ளை பண்ணவில்லை என்றாலோ இந்த டிப்றசன் / மனஉளைச்சல் என்ற வார்த்தையை கூறிவிட்டு அடுத்த நாள் பாக்கிலே டூயட் பாடுவார்கள். அப்படியென்றால் அவர்களைப் பொறுத்த வரையில் ஒரு நாள் டிப்றெசன். முதலில் இது டிப்றெசனா? இல்லை நண்பர்களே. இது எல்லாம் தற்காலிக உணர்வு. டிப்றெசன் என்றால் என்ன என்று அறிந்தால் இவர்கள் எல்லாம் அந்த வார்த்தையை பயன்படுத்த மாட்டார்கள்.

மனை உளைச்சல் ஒரு கொடிய நோய். இருதய பிரச்சனைகள், சிறுநீரக பிரச்சனை போன்று மன உளைச்சல் என்பது மூளையில் ஏற்படும் ஒரு விதமான நோய். செறரோனின் (Serotonine), நோர் அட்றீனலின் (Nor-adrenaline) போன்ற இரசாயனப் பொருட்களில் ஏற்படும் சமநிலை அற்ற தன்மை காரணமாக ஏற்படும் ஒரு விதமான கொடிய உணர்வு.

மனஉளைச்சலிற்கு பிரதானமாக மூன்று அறிகுறிகள் உண்டு.

1. Low mood – அதாவது ஒரு கவலையான / வெறுமையான உணர்வு.
2. Anhedonia – வழமையாக ஒரு நாளிலே ஆர்வமாக ஈடுபடும் செயற்பாடுகளில் எல்லாம் எம்மால் ஈடுபட முடியாது.
3. Lethargy – உடல் சோர்வாகவே இருக்கும்.

இந்த மூன்றும் தான் பிரதானமான அறிகுறிகள். ஆனால் இவற்றை தவிர வேறு பல நோய் அறிகுறிகள் உண்டு.

- ஒரு குறிப்பிட்ட விடயத்தில் கிரகிக்க முடியாது
- எங்களை நாமே பெறுமதி அற்றவர்களாக உணர்வோம்.
- குற்ற உணர்வு மனதிலே இருக்கும்.
- எமக்கு உதவி செய்ய யாரும் இல்லை என்ற உணர்வு.
- வாழ்க்கை இத்தோடு முடிந்து விட்டது. இனிமேல் எதிர்காலம் இல்லை என்ற உணர்வு. இது மிகக்கொடுமையானது. ஏன் எனில் இந்த போலியான உணர்வே தற்கொலைக்கு எம்மைத் தள்ளும்.
- நித்திரை கொள்ள முடியாது. வழமையாக நித்திரையில் இருந்து எழும்பும் நேரத்தை விட 3 மணித்தியாலங்கள் முன்னதாகவே எழும்பி விடுவர். அத்துடன் பலருக்கு அதிகாலை வேளையிலே மன உளைச்சல் உணர்வு அதிகமாகவே இருக்கும். எனவே அதிகாலை யாரும் உதவிக்கு வரமாட்டார்கள். எனவே இந்த நேரத்தில் தான் அதிக தற்கொலைகளும் இடம்பெறுகின்றன.
- இதைவிட நடக்கும், பேசும் வேகம் என்பவற்றில் மந்தம் காணப்படும்.
- கேட்ட கேள்விக்கு உடனடியாக பதில் சொல்ல முடியாது.
- அணிகின்ற ஆடைகள், தலை அலங்காரம் என்பவற்றில் அவ்வளவு கவனம் இருக்காது.
- சில வேளைகளில் கடுமையான மன உளைச்சல்களில் Auditory hallucination காணப்படும். அதாவது அருகில் யாரோ நின்று கதைப்பது போன்ற பிரம்மை பிடித்த உணர்வுகள் எல்லாம் இருக்க முடியும்.

எனவே மேற்கூறிய நோய் அறிகுறிகள் அனைத்தும் ஒருவரிற்கு இருக்க வேண்டும் என்பது இல்லை. ஆனால் மன உளைச்சலிற்குரிய அறிகுறிகள் குறைந்தது 14 நாட்கள் இருக்க வேண்டும். இப்போது இந்த ஒரு நாள் கவலை எல்லாம் மன உளைச்சல் இல்லை. சிலருக்கு மன உளைச்சல் இரு வருடங்களிற்கு மேலதிகமாகவும் இருக்கலாம்.

யாரிற்கு மன உளைச்சல் வருவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகமாக உண்டு

1. பரம்பரையாக மன உளைச்சல் இருந்தால் / அப்பா அம்மாவிற்கு (Genetic)
2. உடலில் கடுமையான சில நோய்கள் இருந்தால்
   - புற்று நோய்கள்
   - இருதய நோய்கள்
   - சிறுநீரக நோய்கள்
   - நீண்டகால உடல் வலிகள்
   - கைப்போ தைரோடிசம்(Hypothyroidism)
3. தனிமை

எனவே ஒருவர் மன உளைச்சலில் இருந்தால் அவரை எப்படியாவது வெளியே கொண்டு வர வேண்டும். ஏன் எனில் கடுமையான மன உளைச்சல் தற்கொலைக்கு இட்டுச் செல்லும். இதைவிட மன உளைச்சல் மூளையை கடுமையாக பாதிக்கும். எனவே மன உளைச்சல் என்பது ஒரு நோய் என்ற தெளிவான விளக்கம் இப்போது உங்களிற்கு இருக்கும் என நான் நினைக்கின்றேன். எனவே மன உளைச்சலுக்கு நான் ஆளாகினால் அதை குறைப்பதற்கு நாம் சில நடைமுறைகளை பின்பற்றலாம்.

1. சமூக வலைத்தளங்களின் பாவனைகளில் இருந்து வெளியே வர வேண்டும்.
2. உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
3. இயற்கையை இரசிக்க முடியும், வெளியே செல்ல வேண்டும்.
4. முக்கியமாக எமது பிரச்சனையை நம்பகமான ஒருவரோடு மனம் விட்டு சொல்ல வேண்டும்.

இதைவிட முக்கியமாக மன உளைச்சல் நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்றால், அதற்குரிய மருத்துவ உதவிகள் பல இருக்கிறது. மருந்துகள் இருக்கிறது. இதைவிட முக்கியமாக உளவியல் சார்ந்த மருத்துவம் இருக்கிறது.(Cognitive behavioral therapy)

எனவே எனதருமை உறவுகளே, மன உளைச்சலிற்கு உள்ளான ஒருவருடைய மன நிலையை உணர்ந்து கொள்ளாமல், அவரிற்கு உதவி செய்யாமல், சிறுபிள்ளைத்தனமாக அவர்களை எம் வார்த்தைகளால் துன்புறுத்தும் ஒவ்வொரு கணமும் நாங்கள் மிகப்பெரிய குற்றத்தை செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை நாங்கள் மறக்க கூடாது.

# ஓடவும் முடியாது ஒழியவும் முடியாது

■ முரளிதரன் செந்தூரன்
மருத்துவப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

தென்னிந்திய மற்றும் இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் Big Boss என்பது ஓர் மைல்கல். அதற்கு கிடைத்த வரவேற்பும் அதன் சமூகம் மீதான தாக்கமும் புறக்கணிக்கமுடியாதது. இந்நிகழ்ச்சியின் பிரபலத்துடன் நடந்த இன்னொரு விடயம் Illuminati யின் பிரபலம். சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் எவராலும் ஓரளவு அறியப்பட்ட ஓர் விடயம் தான் இது. உண்மையில் இலுமினாட்டி என்றால் யார்? அவர்களின் நோக்கம் என்ன? என்ற கேள்விகளிற்கு பாரிசாலன், Healer பாஸ்கர் போன்ற பலர் விளக்கம் கொடுத்து இருந்தாலும் அன்றாடம் நடைபெறும் சிறுசிறு விடயங்களிற்கும் இவர்கள் தான் காரணம் எனும் போக்கு நகைக்கத்தக்கது. அப்படி என்றால் உண்மையில் இவர்கள் யார்?

1776 இல் இன்று ஜேர்மனியிலுள்ள ஒரு பகுதியான Bavaria எனும் இடத்தில் Adam Weishaupt எனும் பேராசிரியரால் உருவாக்கப்பட்டது. இது Bavarian Illuminati என அழைக்கப்பட்டது. Illuminati எனும் இலத்தின் பதத்தின் அர்த்தம் ஒளியூட்டுபவர்கள் என்பதாகும். இது ஒரு இரகசிய அமைப்பாக (Secret Society) செயற்பட்டது. பின்னர் காலத்திற்கு காலம் பலராலும் இப்பெயர் பயன்படுத்தப்பட்டது. ஆகவே உண்மையில் இன்று அனைவராலும் பேசப்படும் இலுமினாட்டி இவர்கள் அல்ல.

நவீன இலுமினாட்டி 13 குடும்பங்களை உள்ளடக்கியதாக கூறப்படுகிறது. அதில் Astor, Kennedy, Rockefeller, Rothschild என்பவர்கள் பிரபலமானவர்கள். இவர்கள் அனைவருமே யூதர்கள் என்றும் இவர்கள் தான் உலகையே கட்டுப்படுத்துபவர்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனால் அது முழுமையாக உண்மையல்ல. இதில் Kennedy யூதர்கள் அல்ல. ஆனால் இந்த குடும்பங்களின் வர்த்தக ஏகாதிபத்தியம் என்பது புறக்கணிக்க முடியாதது. உதாரணமாக John.D.Rockefeller என்பவர் உலக வரலாற்றின் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவர். இவர் Standard Oil Coporation எனும் நிறுவனத்தை உருவாக்கியவர். ஐக்கிய அமெரிக்காவிற்கு வரும் அனைத்து மசகு

எண்ணெயிற்கும் இவரிற்கு ஏகபோக உரிமை இருந்தது. இன்று உள்ள மிகப்பெரும் எரிபொருள் நிறுவனங்களான Exxon Mobil, Chevron, Shell போன்ற அனைத்துமே இவரின் நிறுவனத்தின் பகுதிகள் தான். ஒரு கட்டத்தில் அமெரிக்க பொருளாதாரத்தில் 3.2% இவரின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இது போன்ற இன்னொரு குடும்பம் தான் Rothschild இவர்கள் ஐரோப்பாவில் பல வங்கிகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒரு குடும்பம். ஆனால் இவர்கள் பெயரை Forbes பத்திரிகையில் காண்பது அரிது. இவர்கள் தான் உலகின் உண்மையான பணக்காரர்கள் என்று கூறுவதும் உண்டு. ஆனால் உலகத்தின் அனைத்து நிறுவனங்களையும் இந்த பதின்மூன்று குடும்பங்கள் தான் கட்டுப்படுத்துகின்றன என்பது பொய். அவ்வாறென்றால் இவர்கள் ஓர் ஆதிக்கசக்தியாக எவ்வாறு மாறினார்கள்.

இந்த இடத்தில் தான் உலக வரலாற்றில் ஒரு முக்கியமான நபர் பற்றி நாம் அறிய வேண்டி உள்ளது. அவர் தான் J.P.Morgan, J.P.Morgan and Chase எனும் மிகப் பெரிய வங்கியின் ஸ்தாபகர். இன்று இலங்கை உள்ள பொருளாதார சிக்கலை போன்றதொரு சிக்கலில் அமெரிக்கா சிக்கியிருந்த இருமுறையும் அமெரிக்காவிற்கே கடன்கொடுத்த ஓர் தனிநபர் தான் இவர். அதைவிட அமெரிக்க மத்திய வங்கியின் உருவாக்கத்திலும் இவர் பங்கு என்பது அளப்பெரியது. ஆனால் இவரின் சொத்து மதிப்பு இன்றைய பெறுமதியில் ஒரு பில்லியன் டொலர் கூட இல்லை. ஆக எவ்வாறு இவர் அமெரிக்க நாட்டிற்கே கடன்கொடுத்தார் என்றால் இவரின் வங்கியிற்கு சில ஐரோப்பிய முதலீட்டாளர்கள் இருந்ததாக கூறப்படுகிறது. அவர்கள் அந்த பதின்மூன்று குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஒரு நாட்டை உண்மையில் கட்டுப்படுத்துவது மத்தியவங்கி. உலக நாடுகளை கட்டுப்படுத்தும் ஐக்கிய அமெரிக்காவை கட்டுப்படுத்தும் அமெரிக்க மத்திய வங்கியின் உருவாக்கம் ஓர் இரகசிய நிகழ்வாகவே நடந்தது. இதில் பங்குபற்றிய பலர் அந்த பதின்மூன்று குடும்பத்தை சேர்ந்தவர்கள்.

எனவே அமெரிக்க மத்திய வங்கியை கட்டுப்படுத்துவதன் மூலம் இந்த உலகையே கட்டுப்படுத்தலாம் என்பது வெளிப்படை உண்மை. இந்த முறைமையில் ஏதோ தவறுள்ளது என்பதை முதலில் உணர்ந்து எதிர்த்தவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி Abraham Lincoln. இவர்தான் முதலில் அரசாங்கமே பணத்தை அச்சிட வேண்டும் மத்திய வங்கி அல்ல என்று அரசாங்கத்தால் பணம் அச்சிட்டார். ஆனால் அதைச் செய்து சில காலத்தில் இவர் மர்மாகக் கொல்லப்பட்டது வரலாறு.

இந்த இலுமினாட்டிகள் ஒவ்வொரு நாட்டிற்கும் மேற்பார்வை செய்வதற்காக ஓர் பிரதிநிதியை வைப்பதாகவும் அந்த பிரதிநிதி கமல்ஹாசன் என்பதும் தான் சமூக வலைத்தளங்களின் பரவலான கருத்து சரி உண்மையில் இவ்வாறான பிரதிநிதி இருந்தால் கமலிற்கு முன் யார்? இந்த இலுமினாட்டியினருக்கு சில குணாதிசயங்கள் இருக்கிறது. நாஸ்திக வாதிகள், ஒரு இருபது வருடத்திற்கு முற்போக்காக சிந்திப்பவர்கள் என்பவை தான் அவை.

அப்படியென்றால் இந்த அத்தனை தகுதிகளும் உடையவர் சோ எனும் சோ.ராமசாமி ஆவார். இவர் நகைச்சுவை கலைஞர், நடிகர், மட்டுமன்றி சிறந்த நாடக எழுத்தாளர், பத்திரிகையாளர் என பல பரிமாணமுடையவர். இவரின் நகைச்சுவையை விளங்கிக் கொள்ளவே ஒரு சாமர்த்தியம் தேவை. தமிழில் Sarcasm ஐ முறையாக செய்தவர் இவர்மட்டும் தான். இவரின் நகைச்சுவைகள் எப்பொழுதுமே அரசியல் சார்ந்தவையாகவே இருக்கும். மோடி குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த காலத்தில் அவர் தேசிய அரசியலிற்கு வரவேண்டும் என்றும் பிரதமராக வேண்டும் என்றும்

தொடர்ச்சியாக கூறியவர் இவர் மட்டும் தான். அது நடக்கும் என மோடி கூட நினைத்திருப்பாரோ தெரியவில்லை அதனாலேயே மோடியால் ராஜகுரு என அழைக்கப்பட்டார்.

ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சியை அமைப்பதிலும் இவரின் பங்கு மிகப்பெரியது. எம்.ஜி.ஆர் உடனான ஒரு முரண்பட்டால் திரையுலகத்தில் சில காலம் ஒதுக்கப்பட்ட ஜெயலலிதாவிற்கு இவர் தான் தன் பத்திரிகையான துக்லக்கில் ஆசிரியராகும் வாய்ப்பளித்தார். ஜெயலலிதா அம்மையார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது இவரும் அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அப்பொழுது இவரை பார்க்க பிரதமரான மோடி வந்திருந்தார். இவர் இறந்து 2 நாட்களிலே ஜெயலலிதா அம்மையாரும் மர்மமான முறையில் இறந்தார். இவை அனைத்தும் நடந்த அதே நேரம் கமல்ஹாசன் பிரித்தானிய மகாராணியை சந்திக்க சென்றார்.

கமல் என்றுமே சோவை ரசித்ததுடன் தன் குருவாக கருதியிருந்தார். அவரை போன்ற அரசியல் சித்தாந்தம் உடையவராகவும் கருதியதுண்டு. எனவே இலுமினாட்டியின் பிரதிநிதியாகும் அனைத்து தகுதிகளும் உடையவர் தான் கமல் அத்தோடு Big Boss நிகழ்ச்சியை தொகுத்து நடத்தியது தான் அதை மேலும் வலுச் சேர்த்தது.

Big Boss எனும் நிகழ்ச்சி அனைத்து இந்திய மொழிகளிலும் நடப்பது Big Brother எனும் மேற்கத்தேய நிகழ்ச்சியின் இந்திய பதிப்பு. இதன் சின்னமாகிய அந்த ஒற்றைக்கண் தான் இலுமினாட்டிகளின் சின்னமும் கூட அதைவிட இந்நிகழ்வின் ஒட்டுமொத்த கருப்பொருளே இலுமினாட்டியின் ஒரு உருவகம் தான் யாரென்றே தெரியாத எமக்கு மேலே உள்ள ஒருவர் (Big Boss) கட்டளை இட அதை நாம் செய்ய வேண்டும். அதை சிறப்பாக முடிப்பவருக்கு பட்டம், பதவி, சலுகையும் செய்யாதவர்களிற்கு தண்டனையும் வழங்கப்படும். அதற்குள்ளே ஒரு அதிகாரம், ஏற்றதாழ்வு எல்லாம் இருந்தாலும் உண்மையான அதிகாரம் Big Boss இடமே. இந்த Big Boss இன் பார்வையிலிருந்து ஓடவும் முடியாது ஒழியவும் முடியாது. இந்த Big Boss இன் பிரதிநிதியாக வருபவர் கமல்ஹாசன். இந்த நிகழ்வு ஒளிப்பரப்பாகும் Star தொலைக்காட்சியின் தாய் நிறுவனமான Fox நிறுவனத்தின் உரிமையாளரும் ஒரு வகையில் இலுமினாட்டிகள் என குறிப்பிடப்படுபவருடன் தொடர்புடையவர் தான்.

நான் இலுமினாட்டிகள் உண்மை என்று கூறவில்லை. அது பொய் என்றும் கூறவில்லை. ஆனால் கமல்ஹாசன் ஒருநாள் முதலமைச்சர் ஆனாலோ இந்த கட்டுரையை எழுதியதால் எனக்கு ஏதும் ஆபத்து நேர்ந்தாலோ இதை நம்பலாம் (மேற்கூறப்பட்ட வரிகள் ஆசிரியரின் பாதுகாப்பிற்கு) ஆனால் இலுமினாட்டிகள் உண்மையோ பொய்யோ நாம் எமக்கு மகிழ்வான வாழ்க்கை என கருதுவதை முன்னெடுப்பதில் தடையாகாது. ஆகவே இது போன்ற தேவையற்ற விடயங்களை யோசித்தும் இவ்வாறான பயனற்ற கட்டுரைகளை வாசித்தும் அச்சமடைய தேவையில்லை.

# எறிவதெல்லாம் தெறித்திடும் மீண்டும்

■ சஞ்ஜனி உமாசந்திரன்
மருத்துவப் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

கட்டிடம் உயர்கையில் அடியில் புதைந்திடும்
கதறல்கள் அவை தான் கேட்டிடுமோ
கானகம் எரிகையில் பட்சிகள் இசைத்திடும்
கீச்கிடும் குரல் தான் செவி வருமோ

பயணங்கள் இலகுவாக்க வேறு உயிரின்
பாதையின் வழியை கல்லிட்டு - நிரப்பும்
பாவச் செயலை புரிந்த பின்னும்
போலி வேசம் புரிவது எதற்கு

வேடிக்கை பார்த்து காட்சிகள் களிக்க
வனத்தினில் சுற்றும் சுதந்திர விலங்கை
விலங்கிட்டு அடைத்து உவகை காணும்
விசித்திர உலகே ஓர் கேளிக்கை தான்

திரை போல் நிதமும் காவல் புரிந்திடும்
தருக்கள் கோடி பலனெதிர் பாராமல்
தந்திடும் வளங்கள் அனுபவித்த பின்னும்
தறித்திடும் நியாயம் கேட்பவர் யாரோ

எறிவது எல்லாம் தெறித்திடும் மீள
எரிவது அவை தான் புகைந்திடும் போது
எவ்விதம் தாங்கும் எம் பூமி பந்து
எவரிடம் செல்லும் அடைக்கலம் கேட்டு

அருகிவரும் பல்வகைமை காரணம் நாமே
அவரவர் சுயநலம் தூக்கி எறிந்து
ஆறறிவு கொண்டு ஐந்தறிவு காத்தலை
ஆற்றுதல் கடமையாய் கொள்வது நன்று

# ‘பொன்னியின் செல்வன்’ திரைப்பட வருகையும் நிஜ நாவலில் அதன் தாக்கமும்

■ கிருட்ணபிள்ளை அக்ஷனன்
முகாமைத்துவ பீடம், கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கை

தமிழின் புகழை வளர்த்தெடுக்க சேர சோழ மற்றும் பாண்டிய அரசுகளில் சோழ தேசமும் அதன் ஆட்சிக்காலமும் மிகப்பிரதானமான ஒன்று. பல ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை கம்பீரத்துடன் நிற்கும் தஞ்சை பெரிய கோவில் இதற்கு சான்று. மேலும் ஆதிகாலம் தொட்டே சோழ அரசு இலங்கை நாட்டுடன் அரசியல் ரீதியாகவும் மத கலாசார ரீதியாகவும் பல்வேறு தொடர்புகளை கொண்ட ஒரு தமிழ் பேரரசு இன்றும் கூட சோழ தேசத்தின் ஆட்சியின் போது நிறுவப்பட்ட அரண்மனை கட்டடங்கள் இந்து வழிபாட்டுத்தலங்களின் சிதைவுகளையும் இடிபாடுகளையும் இலங்கையில் பொலனறுவையில் காணலாம். இத்தகைய சோழ தேசத்தின் வரலாற்றையும் அதன் வளர்ச்சியையும் உலகிற்கு அறிய செய்த தமிழ் மொழியின் ஆகச்சிறந்த நுல்களுள் ஒன்று அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் நாவல். வீரம், அரசியல், காதல், பாசம், துரோகம், மக்களின் கொண்டாட்டங்கள், சமூக நிலை, உளவு, இராஜதந்திரங்கள், தெய்வ வழிபாடுகள் என அனைத்து தளங்களிலும் உச்சம் தொட்டது. கூடவே இலங்கை நாட்டிலும் இந்நாவலின் கதைக்களங்கள் இடம்பெறும். இந்த நாவலை தமிழ் இலக்கிய உலகமே தலையில் வைத்துக் கொண்டாடியது. இப்பொழுதும் கூட வாசிப்பு பழக்கம் சற்றே குறைந்து தொழில்நுட்ப கருவிகளில் முழுவதும் மூழ்கிக் கிடக்கும் இந்நவீன உலகிலும் இலக்கிய வாசனை மறவாத சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை பலரால் கொண்டாடப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. ஆனால் ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட பொன்னியின் செல்வன் நூலை வாசிக்கத் தயங்கி இன்னும் அந்தக் கதையின் சாராம்சத்தை முழுமையாக அறியாதவர்களும் நம்மில் பல பேர் உண்டு. இந்நிலையில் இயக்குனர் மணிரத்தினத்தின் இயக்கத்தில் தற்போது திரைப்படமாக இந்நாவல் திரையில் களம் கண்டுள்ளது.

பொன்னியின் செல்வன் திரைப்படம் தற்போது சில நாட்களிற்கு முன் வெளிவந்ததில் இருந்து பெரும்பாலும் எல்லா நபர்களும் அதைப்பற்றியும் சோழ வரலாற்றையும் சமூக வலைத்தளங்களிலும் நேரிலும் பகிர்ந்து வருகின்றார்கள். அவர்களில் பெரும்பாலானோர் பொன்னியின் செல்வன் நாவலை இதற்கு முன் படித்தவர்கள் அல்லர் என்பதையும் பொன்னியின் செல்வன் நாவலின் கதையை

அறியாதவர்கள் என்பதையும் அவர்களின் பதிவுகளில் இருந்து காணக்கூடியதாய் இருந்தது. ஒரு சிலர் பொன்னியின் செல்வன் திரைப்படத்தை பாகுபலி போன்ற பிற திரைப்படங்களுடன் ஒப்பிட்டுக்கூறுவதையும் காண நேர்ந்தது. பாகுபலி திரைப்படம் இயக்குனர் ராஜமௌளலியின் முற்றுமுழுதான கற்பனை கதையில் பல்வேறு கற்பனை கதாப்பாத்திரங்களுடன் ஒரு திட்ட வட்டமான காலப்பகுதி இன்றி முழுமையான கற்பனையில் உருப்பெற்ற கதை ஆனால் பொன்னியின் செல்வன் திரைப்படமானது பொன்னியின் செல்வன் என அழைக்கப்பட்ட அருள்மொழி வர்மன் எனப்படும் மாமன்னன் இராஜ இராஜ சோழன், வந்தியத் தேவன், ஆதித்த கரிகாலன், குந்தவை, சுந்தர சோழர், பழுவேட்டரையர்கள் போன்ற பல நிஜத்தில் வாழ்ந்தவர்களுடன் நந்தினி, மந்தாகினி, மணிமேகலை, ஆழ்வார்க்கடியான் போன்ற சில கற்பனை கதாப்பாத்திரங்களையும் சேர்த்து இன்றைக்கு அண்ணளவாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலவிய நிஜ சோழ வரலாற்றினை தழுவி எழுத்தாளரின் கற்பனையும் கலந்து உருவாக்கப்பட்ட படைப்பு. இதன் பின்னணியில் மாபெரும் வரலாறே உள்ளது. வரலாறு தெரியாமல் இருப்பது தவறு அல்ல வரலாற்றை அறிந்து கொள்ள முன்வராமல் இருப்பது தான் தவறு என்று கூறுவார்கள். எனவே இதுவரையும் பொன்னியின் செல்வன் நாவலை வாசித்திராமல் திரையில் திரைப்படத்தை பார்த்தவர்கள் மற்றும் காண துடிப்பவர்களுக்கான ஓர் தயவான அன்பு கலந்த வேண்டுகோள் பதிவாக இதை எழுதுகின்றேன்.

இயக்குனர் மணிரத்தினம் அவர்கள் எனது மனம் கவர்ந்த இயக்குனர்களில் ஒருவர் முதன்மையானவரும் கூட. மணிரத்தினத்தின் திரைப்படங்களின் மீது எனக்கு ஒரு தனி இரசனை உண்டு. இப்போது அவர் இயக்கத்திலேயே மிகப்பிடித்த ஏ.ஆர் ரகுமானின் இசையுடன் ஒளிப்பதிவாளர் ரவி வர்மனின் கைவண்ணத்தில் பொன்னியின் செல்வன் நாவலை திரையில் காண்பது என்பதுடன் கூடவே எனக்கு மிகப்பிடித்தமான வந்தியத்தேவன் கதாப்பாத்திரத்தில் ஆயிரத்தில் ஒருவன் கார்த்தி நடித்ததும் எனக்கு பூரண திருப்தியுடன் மட்டில்லாத உவகை தான்.

எனினும் இங்கு அதையும் தாண்டி பொன்னியின் செல்வன் நாவல் என்று நோக்கும் போது அதனை தனி ஒருவரின் இயக்கத்திலோ அல்லது குறிப்பிட்ட சில நடிகர்களின் நடிப்பிலோ ஒரு குறுகிய வட்டத்தில் வரையறுப்பது என்பது முற்றிலும் சாத்தியமற்றதும் தவறானதும் கூட. பொன்னியின் செல்வன் நாவலானது இராமாயணம் மற்றும் மகாபாரதம் போன்ற இதிகாசங்களை போலவே அதற்கு பல நூற்றாண்டுகள் காலத்தின் பின் கி.பி 1000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புகழ் பெற்று விளங்கிய ஒரு தமிழ் சாம்ராஜ்ஜியமாக சோழர் காலத்தை தழுவி பல்வேறு கல்வெட்டுக்கள் மற்றும் வரலாற்று ஆதாரங்களின் துணையுடன் கல்கி அவர்களினால் பெரும் அர்ப்பணிப்பில் 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கதையின் சுவாரஷியத்திற்காக கற்பனையும் புனைவும் கலந்த எழுத்துரு பெற்ற ஒரு அரிய தமிழ் படைப்பு. கூடவே இத்தகைய நாவலை இப்போதல்லாமல் பல தசாப்தங்களாக தமிழ் சினிமாவின் ஆரம்ப காலத்தில் இருந்தே முன்னாள் இந்திய தமிழக முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் தொடக்கம் இன்றைய நடிகர் கமல்ஹாசன் வரை பல நடிகர்களும் பல இயக்குனர்களும் திரைப்படமாக எடுக்க முயற்சித்து அதில் வெற்றியீட்ட முடியாமல் போனார்கள். ஆனால் இன்று ஒருவாறு இறுதியாக இந்த நவீன சினிமாவில் பல்வகைப்பட்ட தொழில்நுட்ப வசதிகளுடன் இயக்குனர் மணிரத்தினம், இசையமைப்பாளர் ஏ.ஆர் ரகுமான், ஒளிப்பதிவாளர் ரவி வர்மன் மற்றும் பல திறமை மிக்க திரைப்பட கலைஞர்கள் மற்றும் முன்னணி நடிகர்களின் முயற்சியில் பொன்னியின் செல்வன் நாவல் திரைப்படமாக உருப்பெற்றது என்பது உண்மையிலேயே ஒரு வரப்பிரசாதம் தான். ஆனாலும் அமரர் கல்கியின் பல வருட உழைப்பின் எழுத்தாக்கத்தில் ஆயிரக்கணக்கான பக்கங்களில் 5 பாகங்களாக 300க்கும் மேற்பட்ட அத்தியாயங்களை உள்ளடக்கிய இப்பெரும் நாவலை இரண்டே

பாகங்களில் அண்ணளவாக வெறும் 6 மணித்தியால (3+3) இரு திரைப்படங்களாக உருவமைப்பது என்பது மிகவும் கடினமான காரியம். எவ்வாறாயினும் அதை மணிரத்தினம் அவர்கள் தனது அனுபவம் கலந்த திரை இயக்கத்தினால் குறைவின்றி நிறைவாக பூர்த்தி செய்துள்ளார்.

இருந்தாலும் கூட இப் பெருங்கதையில் எழுத்தாளர் கல்கி அவர்கள் கதையின் ஒவ்வொரு காட்சியையும் ஒவ்வொரு கதாப்பாத்திரத்தையும் ஒவ்வொரு பின்னணியையும் ஏன் கதை முழுவதிலும் வரும் இயற்கை அமைப்பு மற்றும் கதை நிகழும் இடங்களையும் கூட ஒரு உயிர்ப்பான எழுத்துருவாக்கம் கொடுத்து ஆதி முதல் அந்தம் வரை குறைவின்றி நேர்த்தியாக கொண்டு சென்றிருப்பார். அத்தகைய கதையமைப்பு இயக்குனர் மணிரத்தினத்தின் பார்வையில் திரைப்படமாக தற்போது வடிவமைக்கப்பட்ட போது நாவலில் கல்கி அவர்களால் வடிவமைக்கப்பட்ட கதை மற்றும் காட்சிகள் நிச்சயம் சுருக்கப்பட்டோ அல்லது மிகைப்படுத்தப்பட்டோ ஏதோ ஒரு வகையில் நிச்சயமாக மாற்றமடைய செய்து தான் திரைப்படமாக உருக்கொடுக்கப்பட்டுள்ளது. இது நாவலை படித்திராது திரைப்படத்தை பார்க்கப்போகும் பார்வையாளர்களுக்கு பொன்னியின் செல்வன் நாவல் பற்றிய நிஜ தோற்றத்தை ஏற்படுத்தாது. நிச்சயமாக ஒரு புதுவித போலியான பிரதிபலிப்பையே தோற்றுவிக்கும். உதாரணமாக வெளிவந்த முன்னோட்ட காட்சிகளில் ஒன்றில் வந்தியத்தேவனாக கார்த்தி தோன்றும் காட்சி திரைப்படத்தில் கம்சன் வேடம் தரித்து வந்தியத்தேவனின் பழையாறை நோக்கி குந்தவையை சந்திக்கும் அறிமுக காட்சியாக இருக்கிறது.ஆனால் நாவலில் கதைப்படி கதை ஆரம்பித்து பல அத்தியாயங்கள் கடந்து வந்தியத்தேவன் குடந்தை ஜோதிடர் சந்திக்க செல்லும் போது பயணிக்கும் கதை காலக்கட்டத்தில் தான் இருவரும் சந்திக்கும் முதல் காட்சி இருக்கும். அத்தோடு படத்தின் ஆரம்ப காட்சியில் இராஷ்டிரகூட நாட்டுடன் நடக்கும் போரில் அறிமுகம் ஆகுவது போல வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாவலின் படி கதை ஆரம்பிக்கும் கொள்ளிடக்கரையில் காவிரி நதி அழகை இரசித்து செல்லும் இடத்தில் தான் வந்தியத்தேவன் அறிமுகமாகுவான். நாவல் முழுமையாக நிறைவுபெறும் போது கூட வந்தியத்தேவன் இறுதிவரை கதையோடு இருப்பான். மேலும் திரைப்படத்தில் நாவலில் கூறப்பட்ட சில கதாபாத்திரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. காட்சிகளும் சுருக்கப்பட்டுள்ளன. இன்னும் எத்தனையோ பல கதை மனிதர்கள் நாவலில் உள்ளனர். கதைக்களங்களும் உள்ளன. அவ்வொன்றுக்கும் நாவலில் தனிப்பின்னணி விளக்கப்பட்டிருக்கும். இந்த ஒவ்வொரு கதாப்பாத்திரங்களும் ஒவ்வொரு கதை காட்சிகளும் நாவலில் உள்ளதை போலவே திரைப்படத்தில் முழுமையாக வருவதற்கு சாத்தியங்களில்லை. ஏனெனில் பல ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஐந்து பெரும் பாகங்களால் உருவான நாவலை மாற்றியமைக்காமல் மூன்று மணி நேர இரு பாக திரைப்படங்களில் வெளிக்கொண்டு வருவது சாத்தியமற்ற செயல். கூடவே கதை பயணிக்கும் காலவோட்டமும் மாற்றியமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. இது புதிதாக திரைப்படத்தை பார்ப்பவர்களுக்கும் பொன்னியின் செல்வன் நாவல் பற்றி புதுவித பிரதிபலிப்பை உண்டாக்கும். இப்பிரதிப்பலிப்பு நேரானதாகவோ மறையானதாகவோ இருக்கலாம் அது திரைப்படம் வெளிப்படுத்தப்படும் மற்றும் பார்வையாளர்கள் உள்வாங்கப்படும் கோணத்தின் அடிப்படையிலேயே உள்ளது. பல வருட காலங்களாக சிறந்து விளங்கிய ஒரு பழம்பெரும் நாவலின் வரலாறு மற்றும் அதன் பிரதிபலிப்பு இரு பாகங்களாலான திரைப்படத்தின் வரவினால் மாற்றியமைக்கப்படுவது என்பது வேதனைக்குரிய ஒன்று. மேலும் அமரர் கல்கி அவர்களின் உழைப்புக்கும் எழுத்திற்கும் களங்கம் ஏற்படுத்தும் ஒரு செயல் என கூறுவதிலும் மிகையல்ல.

எனவே தான் பொன்னியின் செல்வன் நாவல் இதற்கு முதல் படிக்காத திரையில் கண்ட திரையில் காணத்துடிக்கும் நண்பர்கள், சகோதர சகோதரிகளை திரையில் பார்ப்பதற்கு முன்போ

அல்லது பார்த்த பின்போ ஒருமுறையேனும் படித்து விடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். அண்டவெளியென இருக்கும் பொன்னியின் செல்வன் நாவலின் கற்பனைத்திறன் திரையில் பார்த்தபின் மற்றும் பார்த்து அதன் பின்னர் படிக்கையில் ஒரு வட்டத்துக்குள் அடைப்பட்டு விடும் என்பது உறுதி.

எனவே நாவலை ஒரு தடவையேனும் படித்து நிஜ பொன்னியின் செல்வன் நாவலின் அனுபவத்தை உணர்வது சிறந்தது. இப்போது கூட திரைப்படத்தின் இரண்டாவது பாகம் வெளியாவதற்கு முன்பே பொன்னியின் செல்வன் நாவலை முழுமையாக படித்து விட முடியும். பாகம் இரண்டு வெளிவர இன்னும் பல மாதங்கள் உள்ளன. இவ் இடைவெளியில் தாராளமாக புதிய வாசகர்கள் முழுமையாக படித்து முடித்து விடலாம். எனது சுய அனுபவத்தில் எனது 24 வயது காலப்பகுதியில் பொன்னியின் செல்வன் நாவலை ஆறு தடவைகள் இது வரையில் வாசித்துள்ளேன். சிறுவயதில் இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளை படித்து வரலாற்று கதைகளை படிப்பதில் ஏற்பட்ட ஆர்வம் பின் பொன்னியின் செல்வன் நாவலையும் படிக்க வழியமைத்தது. பொன்னியின் செல்வன் நாவல் வாசித்த பின்னரும் கூட அதைப்போன்ற சோழ சாம்ராஜ்ய கதைக்கரு உடைய நாவல்களை படித்து முடிக்க உத்வேகம் தந்தது. பொன்னியின் செல்வன் நாவல்களை புத்தக வடிவில், பத்திரிகை மற்றும் சஞ்சிகையில் தொடர்கதை வடிவில், கையடக்க ஆவண வடிவில் (PDF), முழு ஒலிப்பதிவு புத்தக வடிவில் (Audio Book), ஏன் சிறுவர் காமிக்ஸ் சித்திர வடிவில் (Cartoon Comics) என பல வடிவங்களில் வாசித்து கேட்டு பார்த்து முடித்த போதிலும் ஒரு தடவை கூட கதை மீதான இரசணை சிறிதும் குறையவில்லை. எல்லாவற்றையும் விட புத்தக வடிவில் வாங்கி படிப்பது என்பது எனது கருத்தில் சிறந்தது. முதற்தடவை புத்தகத்தில் கதையை படித்து கொண்டு மனக்கணக்கில் பிடித்த கதாப்பாத்திரங்களையும் காட்சிகளையும் உருவம் கொடுத்த கதையை வாசிப்பதென்பது ஒரு தனி சுகம். எனினும் இப்போதெல்லாம் அவ்வாறு பலரும் புத்தகமாக வாசிப்பதில் பெரிதளவு நாட்டம் காட்டுவதில்லை என்பது தான் நிதர்சனம். இருந்தாலும் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்றாற் போல கையடக்க ஆவண வடிவில் (PDF) அல்லது ஒலிப்பதிவு புத்தக வடிவிலாவது (Audio Book) பொன்னியின் செல்வன் நாவலை ஒரே ஒரு தடவையாயினும் படித்து விடுங்கள்.

ஆனால் அதற்காக இவ்வாறு நான் கூறுவதெல்லாம் இயக்குனர் மணிரத்தினத்தின் திரைப்படம் தொடர்பில் எனக்கு எதிர்மறையான கருத்து உள்ளது என தவறாக எண்ணி விட வேண்டாம். ஏற்கனவே கூறியதை போல நான் திரைப்படத்தை பார்த்து பூரண திருப்தியுடனும் அளவில்லா நிறைவுடனும் இருக்கும் ஒருவன் தான் ஒரு சிலர்,குறிப்பாக நாவலை முன்னரே படித்து முடித்தவர்கள் பொன்னியின் செல்வன் நாவல் இயக்குனர் மணிரத்தினத்தின் இயக்கத்தில் திரைப்படமாக வெளிவந்ததனை விரும்பாத சிலர் எதிர்மறையான கருத்துக்களை முன்வைப்பதையும் கண்டிருக்கிறேன். பொன்னியின் செல்வன் நாவலின் தீவிர ரசிகர்கள் என அவர்களது காரணங்கள் ஒரு புறம் ஏற்புடையதாக இருந்தாலும் கூட எந்தவொரு விடயமும் எப்போதும் ஒரே நிலையில் நிரந்தரமக இருக்கப்போவதில்லை. கல்வெட்டுக்கள்,நூல்கள்,நாவல்கள்,மேடை நாடகங்கள்,கையடக்க ஆவணங்கள் ீனுகு), ஒலிப்பதிவு புத்தகங்கள் (யுரனழை டிழழம), திரைப்படங்கள் என காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப தேவைக்கு ஏற்றாற்போல மாற்றம் பெற்றுக்கொண்டே இருக்கும். கூடவே இனிவரும் காலங்களில் இன்னும் பல பேரை இத்திரைப்படம் பொன்னியின் செல்வன் நாவலை வாசிக்க வைக்க தூண்டும் என்பதில் சந்தேகமில்லை சிலர் கதாபாத்திரங்களுக்கான நடிகர் நடிகையர் தெரிவு பற்றி விமர்சிக்கிறார்கள். இங்கு இவை எல்லாவற்றுக்கும் குறிப்பிட விரும்புவது யாதெனில் எந்த ஒரு இயக்குனரும்,நடிகரும் தன் படைப்பு

குறைவானதாக வர வேண்டும் என எண்ண மாட்டார்கள். முற்றிலும் தமது உழைப்பு சிறப்பான படைப்புக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டுமென்றே விரும்புவார்கள். அவர்களின் திரை திறமைக்கும், அனுபவத்திற்கும், உழைப்பிற்கும் முன் வெறுமென இங்கே விமர்சனம் செய்து கொண்டிருக்கும் நாம் ஒரு போதும் இணையாக முடியாது. எனவே முடிந்த வரை நேர் எண்ணங்களுடனான மனதுடன் திரைப்படத்தைப் பார்த்து மகிழ்வோம். ஏனெனில் இத்திரைப்படம் பொன்னியின் செல்வன் நாவலை தழுவி அதன் கதையை மாத்திரம் மூலமாக வைத்து எடுக்கப்படுமானால் வாசகர்கள் ஒவ்வொருவரினதும் எதிர்ப்பார்ப்பை முழுமையாக பூர்த்தி செய்ய இயலாது. எவ்வாறாயினும் பொன்னியின் செல்வன் திரைப்படம் திரையுலகத்தில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும், ஏற்படுத்தி கொண்டிருக்கின்றது என்பது மட்டும் நிச்சயம்.

மேலும் இப்போதெல்லாம் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட ஒரு சிலர், எல்லோரும் அல்ல ஒரு சிலர் மட்டும் ஆங்கில திரைப்படங்களையும், ஆங்கில நாடகக் காட்சிகளையும் (Web Series) மட்டும் பார்த்து அவற்றை மட்டும் எல்லா இடங்களிலும் ஆங்கிலத்தில் பகிர்ந்தால் மட்டும் எதுவோபெரிய தனிப்பெருமை அடைவது போல காட்டிக்கொள்கின்றனர். ஆனால் பொன்னியின் செல்வன்போன்ற தமிழ் மொழி சார்ந்த கதைகளை பற்றியும் அவற்றை பற்றி தமிழில் பதிவிடுவதையும் பகிருவதையும் ஒரு ஏளனமான பார்வையில் நோக்குகின்றனர்.நான் ஆங்கில திரைப்படங்கள் மற்றும் ஆங்கில தொடர்கள் பார்ப்பதை,ரசிப்பதை,கொண்டாடுவதை தவறென கூற வரவில்லை. நான் கூட ஆங்கில படங்களும் ஆங்கில தொடர்களும் பார்க்கும் ஒருவன்தான்.படைப்புக்களை ரசிப்பதில் மொழி தடையாக இருக்கக்கூடாது. ஆனால் ஒரு சில ஆங்கில சமூக வலைதள அறிவுமிகு மேதாவிகளின் தமிழ் மொழி தொடர்பான ஒரு ஏளனமான போக்கு தான் விரக்தியும் அதிருப்தியும் உண்டாக்கி விடுகின்றது. ஆங்கில மொழி புலமை என்பது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமான ஒன்று என்பதில் மறுத்தலிக்க ஒன்றுமில்லை. ஆனாலும் கூட அது ஒரு மொழிப்புலமை மட்டுமே. தமிழ் மொழியென்பது ஒரு அடையாளமும் உரிமையும் கூட தமிழ் பயின்று வளர்ந்தவர்களே தமிழ் மொழியை ஏளனம் செய்வது ஏற்புடையது அன்று இங்கு சுட்டிக்காட்டிய இந்த விடயம் எல்லோரையும் குறிப்பிடவும் அல்ல. யார் மனதையும் புண்படுத்தவும் அல்ல,ஏதோ இங்கிலாந்து அரச குடும்பத்தில் பிறந்து அமெரிக்க வெள்ளைமாளிகையில் வளர்ந்தவர்களைப் போல காட்டிக்கொள்ளும் ஆங்கிலத்துணை உரை (Subtitles) இல்லாமல் ஆங்கில காட்சிகளை பார்த்து விளங்கி கொள்ள முடியாதவர்களும் தினசரி காலை முதல் இரவு வரை வீட்டில் மட்டும் எல்லாவற்றுக்கும் தமிழ் கதைத்து பேசி ஆனால் வெளி இடங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வந்து ஆங்கிலத்தில் புரண்டு கொண்டு தமிழில் பேசுவதை பதிவிடுவதை ஏளனம் செய்யும் ஒரு சில ஆங்கில வள்ளல்களை மாத்திரம் தான் குறிப்பிட்டேன் என்பதை தயவுடன் தெளிவுபடுத்திக்கொள்கிறேன். அவ்வாறு அல்லாது யாருடைய மனதையாவது புண்படுத்தியிருந்தால் அதற்கு மன்னிப்பையும் கேட்டுக்கொள்கின்றேன். நான் கூற முற்படுவதெல்லாம் தமிழ் மொழியில் பதிவிடுதலோ உரையாடுதலோ ஒரு போதும் தரக்குறைவானதன்று. ஆங்கில மொழியில் கருத்து தெரிவிக்க வேண்டி வரும் இடங்களிலும் சந்தர்ப்பங்களிலும் தாராளமாக ஆங்கில மொழியை உபயோகிக்கலாம். நான் கூட இதற்கு விதிவிலக்கல்ல தமிழில் தெரிவிக்க வேண்டுமென விரும்பும் விடயத்தை தமிழிலும் ஆங்கிலத்திலும் தெரிவிக்க வேண்டுமென தோன்றும் விடயத்தை ஆங்கிலத்திலும் கூறுகின்றேன். பதிவிடுகின்றேன். அவ்வாறில்லாமல் தமிழ் மொழி பேசுபவர்களாக இருந்தும் எடுத்ததெறகெல்லாம் வேண்டுமென்று தமிழ் மொழியை குறைவான பார்வையில் பார்ப்பதும் எள்ளி நகையாடுவதும் தவிர்க்க பட வேண்டும் என்பதுடன் பொன்னியின் செல்வன் போன்ற ஏனைய பிற தமிழ் கலாசார மற்றும் தமிழ் வரலாற்று விடயங்களை தாய் தமிழ் மொழியிலே சமூக

வலைத்தளங்களில் பதிவு செய்வதை தமிழ் பேசுபவர்களே ஏளனமானதாக நோக்குவதை தவிர்க்க வேண்டுமென்பதோடு இவ்வணுகுமுறை மாற்றப்பட வேண்டுமென்பதுவுமே என் தயவான வேண்டுகோள். இயக்குனர் மணிரத்தினத்தின் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் பொன்னியின் செல்வன் திரைப்படம் தமிழ் சினிமாவில் மட்டுமல்லாது இவ்வாறான சிலரின் போக்குகளிலும் மாற்றத்தை உண்டாக்க வேண்டுமென விரும்புகிறேன் உண்டாக்கும் எனவும் நம்புகிறேன்.

சாராம்சத்துடன் நிறைவு செய்ய முன் இறுதியாக அன்பு கலந்த வேண்டுகோளாக கேட்டுக்கொள்வது யாதெனில் முடிந்த வரை இத்தகைய தமிழ் படைப்புக்களை வாசித்து வரலாற்று அறிவையும் இலக்கிய அறிவையும் வளப்படுத்த சிறியவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை முடிந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பாடத்திட்ட கல்விக்கு மேலதிகமான ஓய்வு நேரங்களில் கையடக்க தொலைபேசி போன்ற சாதனங்களில் மூழ்கி அவற்றுக்கு அடிமையாகி உடல் உள நலத்தை கெடுத்து கொள்வதை விட இத்தகைய வாசிப்பு பழக்கங்களும் புதியன தேடி அறிதலும் மாணவர்களின் அறிவையும் நடத்தையையும் நிச்சயம் விருத்தி செய்யும் சிறுவயது முதலே இதற்கான உந்துதலையும் ஊக்குவிப்பையும் பெற்றோர்களும் பெரியவர்களுமே வழங்கி சிறியவர்களின் அறிவிலும் நடத்தையிலும் மாற்றத்தை உண்டாக்க வேண்டும்.

# அரச பல்கலைக்கழகமும் பகிடிவதைகளும்

■ ஆதித்யா கேதீஸ்வரன்
முகாமைத்துவ பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

"ஒருமைகாண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து" என்பது வள்ளுவன் வாக்கு அதாவது ஒரு பிறப்பில் நான் பெற்ற கல்விஞானம் அவனின் ஏழு பிறப்பிலும் பாதுகாவலாக இருக்கும் என பொருள். நாம் ஆறுவயதில் தாயவளின் கைபிடித்து தொடங்கிய கல்விப்பயணம் உயர்தரம் வரை தொடர்ந்து நம்மவர் வாழ்வின் இலட்சியங்களிற்கான அத்திவாரமான பல்கலைக்கழகம் எனும் உயர்கல்வி நிலையத்தை அடைகின்றது. அத்தனை காலமும் பள்ளிப்பருவத்தில் வெண் சீருடையில் இருந்த ஒரு மாணவன் பல்கலைக்கழகம் எனும் பாரிய தேசத்தினுள் பலவண்ணக்கனவுகளுடன் உள்நுழைகின்றான்.

பல்கலைகழகம் என்பது பல்வேறு கலைகளை கற்றுத்தேர்ந்த முழுமையான மாணவசந்ததியினரை உருவாக்கும் தளமென கருதப்படுகின்றது. இலங்கையை பொறுத்தமட்டில் 1942ஆம் ஆண்டு "Ceylon University" என்ற பெயரில் முதலாவது பல்கலைகழகமானது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தாலும் அக்காலப்பகுதியில் நாட்டில் விரல்விட்டு எண்ணும் அளவுக்கு குறைவான பல்கலைக்கழகங்களே காணப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் மாணவர்களின் கல்வித்தாகத்தை தணிக்கும் முயற்சி போன்ற காரணங்களால் இன்று நாட்டில் 16 பல்கலைக்கழகங்கள் சட்டரீதியாக இயங்கி வருகின்றது. பால், இன, மத, மொழி வேறுபாடுகள் களையப்பட்டு உயர்தர பரீட்சையில் பெறும் வெட்டுப்புள்ளிகளுக்கு அமைவாக மாணவர்கள் இவ் உயர்கல்வி நிலையங்களுக்குள் உள்வாங்கப்படுவர். பல்கலைக்கழகம் செல்லும் புதிய மாணவர்களுக்கு இப்பல்கலைக்கழகங்களை நடத்துபவர்கள் யார்? என்ற கேள்வி எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும் ஒன்றாகும். ஆம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) என்பதே அப்புதிருக்குரிய பதிலாகும்.

பல்கலைகழகமான கல்வி, கலை மற்றும் மாணவர் மத்தியில் இலைமறைகாயாக ஒளிந்து கிடக்கும் பல திறமைகளை வெளிச்சத்துக்கு கொண்டுவரும் தளமாக சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் பல்கலைகழகம் என்ற வார்த்தையை கேட்டால் முதலில் நினைவில் வருவது "பகிடிவதைகள்" என்ற பதம் ஆகும்.

இன்று இவ்விடயம் பெரிதாக பேசப்படாவிடினும் சுமார் ஐந்து,ஆறு வருடங்களுக்கு முன் மிகவும் பேசுபொருளாக காணப்பட்ட ஒன்றாகும். இன்று இவ்விடயம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு காட்டிய அதீத கரிசனைக்காரணமாக இன்றளவில் இப்பகிடிவதைகள் குறைந்த அளவிலேயே காணப்பட்டு வருகின்றன.

3ம், 4ம் ஆண்டு மாணவர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொண்டு நட்புறவுடன் பழகுவதற்கு 1ம்இ 2ம் ஆண்டு மாணவர்களிடையே சிறிய கேலிகளாக ஆரம்பிக்கப்பட்ட இப்பகிடிவதைகள் காலப்போக்கில் ஒரு கலாசாரமாகவே மாறிவிட்டது. இது புதிதாய் உள்நுழையும் மாணவர்களிடையே பயத்தையும், பதற்றத்தையும் உருவாக்கும் நிலைக்கும் வந்துவிட்டது. சிலசமயங்களில் இது கடும் மன உளைச்சலுக்கு மாணவனை இட்டுச்சென்று, தற்கொலை முடிவுகளில் நிறைவடைந்த கதைகளும் நாம் அறிந்ததே.

சில பல்கழைக்கழகங்களின் பெயரைக் கூறும்போது படிப்பு என்பதை பின்தள்ளி பகிடிவதைகளே பிரபலமாக காணப்பட்ட வரலாறுகளும் இங்குள்ளது. உண்மையில் இவ்வாறான பல கசப்பான சம்பவங்கள்,நாம் அறிந்தும் அறியாத பல புதிர்கள் இச்சம்பவங்களின் பின்புலத்தில் நிறைந்து நிற்கத்தான் செய்கிறது. 2010-2017 காலப்பகுதியே பகிடிவதைகளால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று ஆய்வுகள் தெளிவாக படம் போட்டுக்காட்டுகின்றன.

இவ்வாறாக தற்கொலைகள் அதிகரித்துச்செல்ல இதுவே போராட்டங்களாக மாறி சட்டரீதியான பிரச்சினையாகவும் நீதிமன்ற வழக்குகளாகவும் உருப்பெற்று நின்றது.உயர்கல்வி கற்க வாய்ப்பு பெற்ற சில மாணாக்கர்கள் இப் பகிடிவதைகளுக்கும் அஞ்சி பல்கலைக்கழக வாய்ப்பை மறுத்த சந்தர்ப்பங்களும் நமது வரலாற்றுப்பக்கங்களில் காணப்படுகின்றன. இப்பகிடிவதைகளை முழுமையாக தடைசெய்யவேண்டும் என்ற காரணத்தினால் கொழும்பு பல்கலைக்கழக முதலாம், இரண்டாம் ஆண்டு மாணவர்கள் உருவாக்கிய போராட்டத்தின் பிரதிபலனாக இதன் தாக்கம் ஓரளவுக்கு குறைக்கப்பட்டு இருந்தது.

“நம்பிக்கையோடு உன் முதல் அடியை எடுத்துவை முழுப்படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை முதல் படி ஏறு” என்று மார்டின் லூதர் கிங் இன் சிந்தனைக்கு அமைவாக இச்சிறிய பிரமாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் மேலும் மாணவர்களின் பங்காற்றுதலால் வலுப்பெற்று அரசாங்கத்தின் பார்வை வரை சென்று அனைத்து பல்கலைக்கழகங்கள் மீதான சட்டபூர்வமாக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் சிரேஸ்ட மாணவர்கள் கனிஸ்ட மாணவர்களுக்கு பகிடிவதைகளை மேற்கொள்ளக்கூடாது என்று கடுமையான வலியுறுத்தல் விதிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் கடுமையான பகிடிவதைகள் முற்றாக தடைசெய்யப்பட்டிருப்பினும் மாணவர்மத்தியில் சிறுபதற்றம் இன்னமும் கூட நிலவிவருவது உண்மையே

பகிடிவதைகளின் மறுபக்கத்தை சற்றே நோக்குவோமாயின் பாட்டுப்பாடவைத்தல் ,கவிதைகூறுதல்,வர்ணனை செய்தல் போன்றவை புதிய மாணவர்களிடையே இருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வரும் ஒரு களமாக அமைவதுடன் அவர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தும் கருவியாகவும் அமைந்து இருக்கின்றன. பல்கலைக்கழக பகிடிவதைகள் மாணவர்கள் மத்தியில் விரும்பக்கூடிய வகையில் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கதே. சாராம்சமாக முன்னைய காலங்களை விட தற்போது பகிடிவதைகள் நன்றாகவே குறைந்திருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குறிய உண்மையாகும்.

# A RETROSPECTIVE



# EVENTS
## OF TDUSA

### PONGAL VIZHA

All the active members of TDUSA get together to celebrate the Pongal Festival in an authentic way. Along with rural games and entertainment, the Pongal festival enriches the bond among our members and kick-starts the year with immense excitement.

### CAR WASH

An annual fundraising campaign done by TDUSA. We select two prominent areas in our district and arrange a car wash spot, in which we wash the vehicles brought to us. Everyone was expected to provide us with a willing amount of sum for the service. This is another project which gets immensely supported by Trincomalee people annually.




### A/L PILOT EXAMINATION

An annual pilot examination organized by TDUSA is kept for advanced-level students three months prior to their G.C E A/L final examination. This pilot exam will be organized in an exact way as the A/L final exams so as to provide the students with an early experience and exam papers will be prepared by well-experienced teachers from our district.

## VIZHITHIRU

Teaching sessions are done by our members to grade 10 and 11 students in rural areas. Our members visit selected schools around 7 schools throughout the year and spend around two hours teaching students Science and Mathematics. The school staff immensely support this project.




## DO YOU KNOW QUIZ

The largest event of TDUSA in terms of worth and scale. Do You Know Quiz is an annual quiz competition conducted for advanced-level students. Competition for each stream will be conducted separately. The winning team will acquire the prestigious perpetual trophy and will get to keep it for one year until the next competition. This competition is eagerly welcomed and enthusiastically participated in, by the advanced level students every year.

# EVENTS
## OF TDUSA

### BLOOD DONATION CAMP

Annual blood donation camp organized with the support of general hospital staff. We are immensely supported for this campaign by all the Trincomalee people, such that every year we will be able to provide more blood pints than the required count.

### KURUNAHAI ULA

Every year for children's day, all of our members visit a selected Children's Home and spend a whole day there playing games and entertaining the children and giving exciting gifts to them. A close to heart project for all of our members, which makes us spend sincere and dedicated time with the children.




### THANNEER PANDHAL

Sivarathiri Thanneer pandhal is an event organised by us around february month on shivarathiri day. We install our thanneer pandhal near the koneshwaram temple premises and provide refreshing drinks to all the devotees.

## ANNUAL GET TOGETHER AND CRICKET FIESTA

In the final weeks of the year, we allocate a day for our members. Which include a cricket tournament among batches and following day is celebrated with a cultural event with and a dinner party.

## O/L SEMINAR SERIES

Our members travel to the rural areas of our district, and conduct seminars at the schools situated there. The seminars are organized in a way, such that we will provide question papers hardcopies to the students and then explain the questions after they have tried them. This happens every weekend for about three months before the ordinary-level examination. Many schools have requested us to continue this annually, and they are willing to provide the needed support.




## THE GAMBIT

Gambit is the latest initiative of our organisation. To fill the void of a chess tournament in our district we initiated this tournament for Trincomalee school students from grade 3 to Advanced Level. The event happened successfully in 2022 with a large number of enthusiastic student participants. We are looking forward to improving and developing the scale and quality of this initiative in the coming years.


A RETROSPECTIVE
Annual Pilot Exams 2021
First Form Guidance Seminar
BACK TO SCHOOL
25 YEARS OF EXCELLENCE
BLOOD DONATION CAMP - 2019
TDUSA
ANNUAL CRICKET FIESTA WINNERS

# 2021 Batch of TDUSA

| Name | Faculty | University |
|---|---|---|
| Muraleetharan Luke Josiah | Engineering | University of Moratuwa |
| Pavalagsana Thiruchelvam | Engineering | University of Jaffna |
| Gowsalya Kumaravel | Engineering | University of Jaffna |
| Sundararajah Thesikan | Engineering | University of Moratuwa |
| Sevarajah Arjun | Engineering | University of Moratuwa |
| Hamsana Sriskandarajah | Engineering | University of Jaffna |
| Vamathevan Arivanan | Engineering | University of Ruhuna |
| Kokulaselvan Vipulan | Engineering | University of Jaffna |
| Thivija Gunaratnam | Engineering | University of Jaffna |
| Mathuwanthi Navakumar | Engineering | University of Sri J'pura |
| Sithravelayutham Mithushanth | Engineering | University of Moratuwa |
| Prabaharan Kiruthikan | Engineering | University of Ruhuna |
| Sivananthan Gowshigan | Engineering | University of Ruhuna |
| Raveendran Nilakshan | Computer Science | University of Uva Wellassa |
| Vijendran Sathurshikan | Town & Country Planning | University of Moratuwa |
| Vilashini Jeyapalan | Faculty of Science | University of Colombo |
| Muhunthan Akshayan | Software Engineering | Sabaragamuwa University |
| Hamsinath Rajakulasingam | Business and Finance | Wayamba University of Sri Lanka |
| Vijayaraj Menushaa | Information Technology | University of Moratuwa |
| | | |
| Sinthurini Kumanan | Medicine | University of Colombo |
| Suruthivasini Kokuladasan | Medicine | University of Jaffna |
| Thamicca Jegathasan | Medicine | University of Jaffna |
| Kanesamoorthy Kanoojan | Medicine | University of Jaffna |
| Saranga Sriketheeswaran | Medicine | University of Jaffna |

| | | |
|---|---|---|
| Gajemuki Suthakaran | Medicine | University of Jaffna |
| Madasamy Kugatharshan | Medicine | University of Jaffna |
| Loshana Prathipan | Medicine | University of Jaffna |
| Nerashika Ravinthiran | Medicine | University of Peradeniya |
| Renisha Suzane Reginauld Peter | Medicine | University of Peradeniya |
| Vidyaharan Pramothayan | Medicine | University of Kelaniya |
| Yalinee Sivananthan | Medicine | University of Peradeniya |

---

| | | |
|---|---|---|
| Davidpillay Warrenpillai | Faculty of Business | University of Moratuwa |
| Lackshika honestly Nesarajah | Management studies & Commerce | University of Sri J'pura |
| Pavatharani Balachandran | Social Science | University of Kelaniya |

---

| | | |
|---|---|---|
| Asmitha Chandrakumar | Fine Arts _Music | University of Jaffna |
| Sharveena Jeyaseelan Danial | Arts | University of Jaffna |
| Sharanya Mathiyalagan | Law | University of Jaffna |

---

| | | |
|---|---|---|
| Kandhasaamy Habileswaran | Technology | University of Sri J'pura |

---

# 2022 Batch of TDUSA

| Name | Faculty | University |
|---|---|---|
| Haritharan Dhiviyamainan | Engineering | University of Moratuwa |
| Kaaviya Balendran | Engineering | University of Moratuwa |
| Annci Donacia Glennie Johnpillai | Engineering | University of Moratuwa |
| Jeyaseelan Thanuwacshan | Engineering | University of Moratuwa |
| Shathurshiga Jeyaparan | Engineering | University of Peradeniya |
| Thangeswaran Arulram | Engineering | University of Peradeniya |
| Jegatheeswaran Danusigan | Engineering | University of Ruhuna |
| Sarishkumar Piradickshann | Engineering | University of Ruhuna |
| Balakumaran Jhyogadharshan | Engineering | University of Jaffna |
| Thusharikka Vasantharajah | Engineering | University of Jaffna |
| Kulathevarajah Navamedullan | Engineering | University of Jaffna |
| Rajayogam Sanjayan | Engineering(EM) | University of Moratuwa |
| Elankeshwaran Naveenkumar | Engineering | University of Jaffna |
| Ruthirakanthan Renukanth | Engineering | University of Jaffna |
| Krishnasaai Sivakumar | Engineering | University of Jaffna |
| Utheaseelan Krisothman | Engineering | South Eastern University |
| Shobika Sivasundaram | Engineering | South Eastern University |
| Abirami Balasingam | Engineering | South Eastern University |
| Rishanika Krishnakumar | Town and Country Planning | University of Moratuwa |

| | | |
|---|---|---|
| Muraleetharan Senthuran | Medicine | University of Colombo |
| Sasitharan Senthuuran | Medicine | University of Sri J'pura |
| Saththiyaseelan Pravienan | Medicine | University of Sri J'pura |
| Praveena Paramasabai | Medicine | University of Kelaniya |
| Jasothika Uthanthirarasa | Medicine | University of Kelaniya |
| Niruthiya Thirumaran | Medicine | University of Jaffna |

| | | |
|---|---|---|
| Ramiyalashini Satheeskumar | Medicine | University of Jaffna |
| Peranantham Thuvarakan | Medicine | University of Jaffna |
| Arulkumaran Aakash | Medicine | University of Jaffna |
| Prabothini Thavanathan | Medicine | University of Jaffna |
| Sothyrajah Mathurshanan | Medicine | University of Jaffna |
| Sanjanie Umachandran | Medicine | University of Jaffna |
| Jegatheswaran Janenthan | Medicine | University of Jaffna |
| Balagae Kaavintha Prasanna | Medicine | University of Jaffna |
| Athmisaynee Raveendran | Information Technology | University of Moratuwa |
| Rishabthane Sritharan | Animal Science | Uva Wellassa University |

---

| | | |
|---|---|---|
| Jack Danver Barthelot Bosco Barthelot | Management | South Eastern University |
| Vasuthevan Sivas | Management | Wayamba University |
| Navaneethan Navalojan | Management | Rajarata University |
| Manivannan Kishok | Management | South Eastern University |
| Kantharoopan Kavikshan | Management | University of jaffna |
| Sivaeswaran Sinthujan | IT &management | University of Moratuwa |
| Rajakanthan Niges | Management | University of jaffna |
| Mokanakumar Yoshayini | Management | Eastern University |
| Sasikaran Dilonika | Management | Wayamba University |
| Arulkirupakaran Richy | Management | University of jaffna |
| Vijayakumar diluksha | Management | University of Sri J'pura |
| Yoganathan Vatshika | Management | University of jaffna |
| Rajaruban Nithurshika | Management | South Eastern University |
| Aathithya Ketheeswaran | Management | University of jaffna |
| Puvananathan Bavatharani | Management | University of jaffna |
| Vigneswaran Sayinthapi | Management | Wayamba University |
| Mathivanan Nojika | Banking and insurance | University of vavuniya |

| | | |
|---|---|---|
| Kangatharan Vijitharan | Management | Wayamba University |
| Ganesh Kokulakavi | Business science | University of moratuwa |
| Thillainathan Rakavi | Management | Wayamba University |
| Rajeshwara sarma Sathursana | Management | University of jaffna |
| Chandramohan Sathurshan | Allied Health Science | University of Jaffna |

| | | |
|---|---|---|
| Theivendran Tharanija | Arts | University of jaffna |
| Rohankumar Reshmah | Arts | University of jaffna |
| Piratheeshparan Jilakshana | Arts | University of jaffna |
| Nakarasa Jathusga | Arts | University of jaffna |
| Chandramohan sanyuthan | Arts | University of jaffna |
| Sriskantharasa Kithurshan | Arts | University of peradeniya |
| Jeyaratnam Abilashini | Fine Arts of music | Vipulananda University |

| | | |
|---|---|---|
| Kannan Harishanth | Information Technology | University of Moratuwa |
| Krishnaa Abilshan | Engineering Technology | University of Jaffna |
| Sithamparanathan Sankeeth | ICT | University of Sri J'pura |
| Jegarasasingam Jayathukshan | Engineering Technology | University of Rajarata |
| Rakshana Varatharajan | Biosystems Technology | University of Jaffna |
| Arunagiri Praveenan | Biosystems Technology | university of Jaffna |
| Ravichsanthiran Thapilashan | Engineering Technology | University of Sri J'pura |

# THE GAMBIT CHESS TOURNAMENT - 2022

# WINNERS

## UNDER 11 - BOYS

| | | |
|---|---|---|
| 1st | - Amalanathan Hirutheeshan | - T/R.K.M.Sri Koneswara Hindu College |
| 2nd | - D. Aswin | - T/Selvanayagapuram Maha Vidyalam |
| 3rd | - Raveendran N.Vesh | - T/R.K.M.Sri Koneswara Hindu College |

## UNDER 11 - GIRLS

| | | |
|---|---|---|
| 1st | - Piyadigamage theshanki pi | - T/Sinhala Mah Vidyalam |
| 2nd | - T. Vasutha | - T/St.Mary's College |
| 3rd | - Apshara uthayasangar | -T/Shanmuga Hindu Ladies College |

## UNDER 13 - BOYS

| | | |
|---|---|---|
| 1st | - Gajendran kartigeyan | - T/R.K.M.Sri Koneswara Hindu College |
| 2nd | - Balamurugan Sathan | - T/R.K.M.Sri Koneswara Hindu College |
| 3rd | - Aruluvaratharajah Abilashan | - T/R.K.M.Sri Koneswara Hindu College |

## UNDER 13 - GIRLS

| | | |
|---|---|---|
| 1st | - Prithikkshi DominicSebastian | - T/St.Mary's College |
| 2nd | - Shruthitha sivasankaran | -T/Shanmuga Hindu Ladies College |
| 3rd | - Aarunya Ravindra | - T/St.Mary's College |

## UNDER 15 - BOYS

| | | |
|---|---|---|
| 1st | - Thangeswaran Vithuz | - T/R.K.M.Sri Koneswara Hindu College |
| 2nd | - Domnic Sebastian Rinukshiyan | - T/St.Joseph College |
| 3rd | - Gnanaruban jathushikan | - T/R.K.M.Sri Koneswara Hindu College |

## UNDER 15 - GIRLS

| | | |
|---|---|---|
| 1st | - Umarajan Sasreka | -T/Shanmuga Hindu Ladies College |
| 2nd | - Amalanathan Mahisha | -T/Shanmuga Hindu Ladies College |
| 3rd | - S.Lakshimitha | -T/Shanmuga Hindu Ladies College |

## UNDER 19 - BOYS

| | | |
|---|---|---|
| 1st | - Sasitharan Piranavan | - T/R.K.M.Sri Koneswara Hindu College |
| 2nd | - Ilencheliyan Thamilkumaran | - T/Orr's hill Vivekanda College |
| 3rd | - Kulathevaraja Vithurshan | - T/R.K.M.Sri Koneswara Hindu College |

## UNDER 19 - GIRLS

| | | |
|---|---|---|
| 1st | - Abitha Aairthenathan | - T/St.Mary's College |
| 2nd | - R.Alaniya | -T/Shanmuga Hindu Ladies College |
| 3rd | - G.Gaayathri | -T/Shanmuga Hindu Ladies College |

# "DO YOU KNOW?" QUIZ - 2022

# WINNERS

## MATHS & BIO STREAM

| | |
|---|---|
| Champion | -T/Shanmuga Hindu Ladies College |
| Runner-up | - T/R.K.M.Sri Koneswara Hindu College |
| 2nd Runner-up | - T/Orr's hill Vivekanda College |

## COMMERCE STREAM

| | |
|---|---|
| Champion | -T/Shanmuga Hindu Ladies College |
| Runner-up | - T/Orr's hill Vivekanda College |
| 2nd Runner-up | - T/St.Mary's College |

## ARTS STREAM

| | |
|---|---|
| Champion | -T/Shanmuga Hindu Ladies College |
| Runner-up | - T/Orr's hill Vivekanda College |
| 2nd Runner-up | - T/St.Mary's College |

## TECHNOLOGY STREAM

| | |
|---|---|
| Champion | - T/Vipulanada College |
| Runner-up | - T/Orr's hill Vivekanda College |
| 2nd Runner-up | -T/Nilaveli Kaileswara College |

# நன்றி நவிலல்

திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பெருமையுடன் வெளியிடும் ‘திகழொளி’ என அழைக்கப்படும் எமது கன்னி சஞ்சிகை வெளியீட்டுக்கு பங்களிப்பு நல்கிய உள்ளங்களை சற்றே நினைத்து பார்க்கும் தருணம் இது. முதலில் இந்நூல் வெளியீட்டுக்கு தம் முழு ஊக்குவிப்பையும், நல்வாழ்த்துக்களையும் வழங்கிய ஒன்றியத்தின் மேலாளர்களுக்கும் மேற்பார்வை குழு உறுப்பினர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

அதனை தொடர்ந்து எம்முயற்சியின் மேன்மைக்கு ஆசிச்செய்தி மற்றும் வாழ்த்துச்செய்திகளை வழங்கிய பேருள்ளங்களுக்கும் எமது கனிவான நன்றிகள். இந்நூல் வெளியீட்டு எண்ணம் ஆரம்பத்திலிருந்து அதற்கென தமது ஆலோசனைகள் மற்றும் இதர பல உதவிகளை வழங்கியதோடு மட்டுமல்லாது தம் வண்ணமயமான ஆக்கங்களால் இந்த ஜோதிக்கு இன்னும் பிரகாசம் சேர்த்த கழகத்தின் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட மாணவர்களுக்கு எமது தோழமை கலந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம். மேலும் 28 வருடகாலமாக ஒன்றியத்திற்காக அயராது உழைத்த ஒன்றியத்தின் முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் அனைவரையும் பெருமையுடன் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். மற்றும் ஒன்றியத்திற்காக என்றும் பொருள் வடிவிலொ சரி, நிதி வடிவிலோ சரி தமது ஒத்துழைப்பை நல்கும் அனைத்து நலன்விரும்பிகளுக்கும் ஒன்றியம் என்றும் நன்றியுடன் நினைவிற்கொள்ளும். அதுமட்டுமல்லாது குறுகிய காலவரையரையினுள் இதனை அழகாக அச்சடித்து உருவம் தந்த ‘Ben Vision Printers’ அச்சகத்தினருக்கும் எமது பணிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர்களை எல்லாம் கடந்து எமது இவ் முயற்சிக்கு சிறு வார்த்தையளிவிலேயாயினும் உதவி புரிந்து நாம் இங்கு பெயர் குறிப்பிட மறந்து போன அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எம் பாசம் கலந்த நன்றியை கூறிக்கொள்கின்றோம்.

நன்றி

**மலர்குழு**